விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 01 சனிக்கிழமை (17.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333




## விடுதலைப்புலிகளை தடைசெய்ய அரசாங்கம் திடீர் நடவடிக்கை!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சில அரசியல் கட்சிகளின் கோரிக்கைக ளுக்கேற்பவே ஜனாதிபதி இம்முடிபை எடுத் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவைப் பெறும் நோக்கிலேயே இம் முடிபை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தமிழ் மக்களுக்காக தனி ஈழம் கேட்டு விடு தலைப் புலிகள் பல ஆண்டுகளாக ஆயுத மேந்தி போராடி வருகின்றனர். கொழும்பு மத் திய வங்கி மீது விடுதலைப் புலிகள் தற் கொலைப் படைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு அவர்கள் மீது தடை விதிக்கப்பட்டது.

அதன் பின்னர் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## ஐ.தே.க.எம்.பிக்களுக்கு சி.ஐ.டியினர் அழுத்தம்

### ரணில் குற்றச்சாட்டு




(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர்களில் மூவரின் மீது குற்றப்புலனாய் வுப் பிரிவினர் அழுத்தம் கொடுக்கின்றனர்.

இது உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயலா கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

# புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்து முடக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடல்ல



## அமெரிக்கத் தூதுவர் விளக்கம்

(கொழும்பு)

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீதான நடவடிக்கையானது தமிழ் மக்களுக்கு எதி ரான நடவடிக்கை அல்ல. தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளுக்குப் பேச்சுவார்த்தையூடாக அரசியல்தீர்வுகாணப் பட வேண்டுமென அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது என அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்தார்.** *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழர் புனர்வாழ்வுக் கழக சொத்து முடக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கண்டனம்

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத் துக்களை முடக்குவதற்கு அமெரிக்கத் திறை சேரி தீர்மானம் எடுத்துள்ளமையானது தமிழ் மக்களுக்கு மிகுந்த கவலையையும் ஏமாற் றத்தினையும் ஏற்படுத்தியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந் திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கடந்த மூன்று தசாப்த காலமாகத் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத் தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப் புப் போர் நடவடிக்கையின் போது பல இலட் சக் கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள் ளனர். *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## முல்லைத்தீவில் கடற்கொந்தளிப்பு

வங்கக்கடலில் உருவான சூறாவளி வங்க தேசக் கடற்கரையைக் கடந்துள்ள நிலையில் இந்தியா மற்றும் இலங்கைக் கடற்கரையோ ரங்களில் நேற்று கடற்கொந்தளிப்பு ஏற்பட் டது.

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கடற்கொந்தளிப்பு

## அதிகாரப் பரவலாக்கலின் மூலமான தீர்வுக்கே மக்கள் ஆணை வழங்கினர்

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்க லுக்கே மக்கள் ஆணை வழங்கினர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

கம் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்த்துப் பொறுக்க முடியாதவர்களே கிளிநொச்சி மீது



ரங்களில் நேற்று கடற்கொந்தளிப்பு ஏற்பட்டது.

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு கடற்கரையெங்கும் நீர் பரவியது. இதனால் கரையிலிருந்த கடற்றொழில் பொருள்கள் அடித்துச் செல்லப்பட்டன.(ச-5)

(கொழும்பு)


ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலுக்கே மக்கள் ஆணை வழங்கினர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்ததாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

கம் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்த்துப் பொறுக்க முடியாதவர்களே கிளிநொச்சி மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் வல்லமை எதிர்க்கட்சித் தலைவர் (08 ஆம் பக்கம் பார்க்க)



# வீதித் தடையில் சிக்கிய நிலையில் நடந்து சென்ற அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

வீதித்தடையில் சிக்கிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நடந்து சென்ற சம்பவம் ஒன்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அமெரிக்கக் கிளையின் நிதியை தமது அரசு முடக்கியுள்ளமை தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் விளக்கமளித்திருந்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பிற்காக காலி வீதியிலுள்ள அமெரிக்கத் தூதுதரகத்திலிருந்து அருகிலிருந்த அமெரிக்க மையத்திற்கு வாகனத்தில் செல்வ (08 ஆம் பக்கம் பார்க்க)

# வங்கதேச சூறாவளியினால் நூற்றுக் கணக்கானோர் பலி

(கொழும்பு)

வங்கதேசத்தின் தென்மேற்குக் கடற்கரை பகுதிகளைத் தாக்கிய சக்தி மிக்க சூறாவளியினால் பல நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.


200ற்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக அரசாங்க அதிகாரிகள் உறுதி செய்யும் அதேவேளை குறைந்தது 400 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சில தகவல்கள் கூறுகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான வழிகளை சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்கள் தடுத்துள்ளதால் பாதிப்பின் முழுமையான அளவை அறிய நேரந்தேவைப்படும் என்று கூறப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான வீடுகளை தரைமட்டமாக்கிய இந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

# தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி நாடு இரண்டாகப் பிரிவதற்கான அறிகுறி

## சிறிபதி எம்.பி.கூறுகிறார்




(கொழும்பு)

நாடு பிரியப் போகின்றது என்பதையே இன்றைய பொருளாதார வீழ்ச்சி கட்டியம் கூறுகின்றது. 1991 ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனாவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைப் போன்று இலங்கையிலும் தற்போது பொரு ளாதாரம் வீழ்ச்சி கண்டு வருகின்றது.

நாடு இரண்டாகப் பிரிவதற்கே இந்நிலை வழிவகுக்கும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனின் கொலையைக் கண்டித்து கனேடிய மாணவர்கள் போராட்டம்




(ரொறன்ரோ)

வான் படையால் படுகொலை செய்யப்பட்ட சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட 7 மாவீரர்களின் படுகொலையினைக் கண்டித்து கனடா ரொறன்ரோவில் தமிழ் மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தியுள்ளனர்.

ரொறன்ரோவில் உள்ள யோர்க் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களும், ஏனைய தமிழ் மாணவர்களும் இணைந்து கடந்த திங்கட்கிழமை இரவு 12.30 மணி தொடக்கம் புதன்கிழமை மாலை 4.30 மணிவரை உணவின்றி, உறக்கம் இன்றி,வாய் பேசாது இக்கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலை குறித்தும் அது பற்றி கனடிய அரசாங்கம் மௌனம் சாதித்து வருவது பற்றியும் தமது மிகக் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் 40 மணிநேரம் தொடர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

20 பேர் கொண்ட மாணவர்கள் உண்ணாது உறங்காது இருப்பதைக் கேட்டும் கண்டும் சக பல்கலைக்கழக மாணவர்களும் பேராசிரியர்கள் சிலரும் அவர்களுடன் சென்று உரையாடியதுடன் தமது ஆதரவையும் தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் தமது வாயை கறுப்புத் துணியால் மூடிக் கட்டி 40 மணிநேரம் எவருடனும் பேசாமல் ஈழத்தில் மக்கள் படும் இன்னல்களையும் அவர்கள் மௌனிகள் ஆக்கப்பட்டதையும் சித்திரிக்கும் வகையில் அங்கு இருந்தனர்.

இவர்களுடன் கூட இருந்த சக மாணவர்கள் ஈழத்தில் மக்கள் படும் அவல நிலையை பற்றியும் கனேடிய அரசின் இலங்கை தொடர்பான பக்கச்சார்பு கொள்கை பற்றி வேற்றின மாணவர்களுக்கு தெளிவுபடுத்திய வண்ணம் இருந்தனர். (ச-5)

## "ஒரு கருவூலம் கருகிவிட்டது" கவிஞர் வைரமுத்து தெரிவிப்பு

(சென்னை)

"ஒரு கருவூலம் கருகிவிட்டது" என்று பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் மறைவு குறித்து கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

குமுதம் வார இதழில் கவிப்பேரரசு வைரமுத்து பதில்கள் பகுதியில் தமிழ்ச்செல்வன் மரணம் பற்றி...? என்ற கேள்விக்கு அவர் அளித்துள்ள பதிலில்;

தமிழ்ச்செல்வன் உடலுக்குள் இயங்கியது ஓருயிரும் ஒரு மூளையும் அல்ல-ஓர் இயக்கம்.

போர்க்களத்துப் புன்னகை போய்விட்டது. ஒரு கருவூலம் கருகிவிட்டது.

உலகத் தமிழினம் அழுகிறது. ஆனால் அது தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்வது மீண்டும் அழுவதற்கல்ல-என்று தெரிவித்துள்ளார். (ச-5)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூட ஆசிரியர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (ச-4)

## குடும்பஸ்தர் சரண்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைந்து, மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளால் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சரசாலை வடக்கு சாவகச்சேரியை சேர்ந்த 34 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையே உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்தவராவார். (ச-4)

# அமெரிக்க அரசாங்கத்துக்கு இலங்கை நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை முடக்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தியபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

உலகம் முழுவதிலும் நிதி திரட்டி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வந்தமையே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு எதிரான முக்கியமான குற்றச்சாட்டாகும்.

எனவே வேறு ஒரு பெயரிலோ அல்லது புதிதாகவே மீண்டும் இயங்க முடியாதபடி இந்த அமைப்புக்கு அமெரிக்க அரசாங்கம் தடை விதித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகளை கவனித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு நான் அமெரிக்கா சென்றிருந்த போது அமெரிக்க திறைசேரி அதிகாரிகளிடம் கோரினேன்.

எனது கோரிக்கைக்கு மதிப்பளித்து அவர்கள் செயற்பட்டுள்ளனர். அந்த அமைப்பின் 2006 ஆம் ஆண்டின் கொடுக்கல் வாங்கல்கள்பற்றி ஆராய்ந்த பின்னரே பயங்கரவாத ஒழிப்புச்சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த முதலாவது அமெரிக்க நிறுவனமாக அந்த நாட்டின் திறைசேரி விளங்குகிறது என்றார். (ச-5)

## கம்பஹாவில் தேடுதல் 57 பேர் கைது

(கொழும்பு)

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலைவரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 57 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்தினரின் உதவியுடன் இந்த தேடுதலை மேற்கொண்டதாக கம்பஹா விசேட குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சம்பத் ரணசிங்க கூறினார்.

இத்தேடுதலில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறிய 12 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்களில் ஒருவர் தமிழர் எனவும் அவர் கூறினார்.

இது தவிர குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்தவர்களென நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் இந்த தேடுதலில் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கம்பஹா விசேட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சம்பத் ரணசிங்க கூறினார். (ச-5)

## ஜெயலலிதாவின் பார்வையில் ஐந்து குற்றவாளிகள்



(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளை யார் ஆதரித்தாலும் தேசத்துரோகிகள் என்று தமிழகத்தின் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்த கருத்துக் குறித்து திராவிடர் கழகத்தின் உத்தியோக பூர்வ நாளேடான விடுதலை பதிலளித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்டதற்காக இரங்கல் தெரிவித்த முதலமைச்சர் கலைஞர், தமிழர் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க, பொதுச் செயலாளர் வை.கோ., மருத்துவர் ச.இராமதாஸ், பழ. நெடுமாறன் உள்ளிட்ட அனைவரும் தேசத் துரோகக் குற்றவாளிகளாம்.

இப்படிச்சொல்லியிருப்பவர் வேறு யாருமல்லர், முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் ம.தி.மு.கவின் கூட்டணிக் கட்சியின் தலைவியுமான செல்வி ஜெயலலிதாதான்.

செய்தியாளர்களுக்கு நேற்று அவர் அளித்த பேட்டியிலேயே இப்படிக் கூறியிருக்கிறார். நான் பாப்பாத்திதான் என்று சட்டப் பேரவையில் அறிவித்தவராயிற்றே. தான் முன்மொழிந்ததை இப்பொழுது அவரே வழி மொழிந்து பேசியிருக்கிறார்.

அவ்வளவுதான்! தமிழர்கள் அடையாளம் காண்பார்களாக! என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# புலிகளை முன்னுதாரணம் காட்டி அறிவுரை கூறிய சிதம்பரத்தின் மகன்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளை முன்னுதாரணம் காட்டி இந்தியாவின் காங்கிரஸ் கட்சிக்கு இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தின் பொன்னமராவதி , அரிமளம், திருமயம் உள்ளிட்ட இடங்களில் இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரமும் அவரது மகன் கார்த்தி சிதம்பரமும் காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினர்.

இதில் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் பேசியுள்ளதாக தமிழகத்தில் இருந்து வெளிவரும நக்கீரன் வார இதழில் கூறப்பட்டுள்ளதாவது.

தமிழகத்தில் நாம் எந்த முடிபு எடுக்க வேண்டுமென்றாலும் டில்லியை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இலங்கையில் தமிழ்ச்செல்வன் இறந்தவுடனேயே மறுதலைவரை நியமித்திருக்கிறார்கள் . ஆனால் காங்கிரஸ் கட்சியில் அப்படி இல்லை.

6 மாவட்டங்களில் மட்டுமே செல்வாக்குள்ள பா.ம.க.தமிழக அரசை அலற வைக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட்டம் நடத்தி அரசை கலங்கடிக்கிறார்கள்.

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள பெரிய கட்சியான காங்கிரஸ் ஒன்றும் செய்ய முடியவில்லை. மக்களுக்காகப் போராட முடியாத இரண்டுங் கெட்டான் நிலையில் இருக்கிறோம்.

இந்த நிலைமையை மாற்ற நாம் முதலில் போராட வேண்டும். இல்லையென்றால் தமிழக காங்கிரஸை அரசியல் கட்சியாக நடத்தாமல் அரிமா சங்கத்தில் (லயன்ஸ் கிளப்) சேர்த்துவிடலாம் என்று கார்த்தி சிதம்பரம் கூறியுள்ளதாகவும் அதற்கு பலத்த கை தட்டல் கிடைத்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சந்தேகத்திற்கிடமான இருவர் பொலிஸாரால் கைது

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஆணொருவரையும், பெண்ணொருவரையும் பண்டாரகம பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

பண்டாரகம பகுதியில் துணி விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகத்திற்கிடமான தமிழ் தம்பதியினர் குறித்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் தீவிர விசாரணைக்குட்படுத்திய பொலிஸார், இவர்களில் பெண்ணிடமிருந்தது போலி அடையாள அட்டை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அத்தோடு கைது செய்யப்பட்ட ஆணின் காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கான தழும்பும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## பரிசளிப்பு விழா

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா-2007, இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு,யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும்.

விழாவின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய வே.தி.செல்வரட்ணம் கலந்து கொள்வார். திருமதி சாரதாதேவி செல்வரட்ணம் பரிசில்களை வழங்குவார். (ச-6)

# படகுத் தொழிற்சாலையின் மீது முறிகண்டியில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

விமானப் படையின் குண்டுவீச்சில் கிளிநொச்சி நகருக்கு தெற்காக உள்ள முறி கண்டியில் உள்ள தனியாரின் படகு கட்டுமானத் தொழிலகம் அழிக்கப்பட்டுள்ளது. அதில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என கிளிநொச்சிக் தகவல்கள் தெரிவித்தன.

வான்படையின் விமானங்கள் நேற்றுக் காலை 6.28 மணிக்கும் 6.35க்கும் இடையில் 2 முறை 'சோலை' கண்ணாடி இழைப் படகுகள் உற்பத்தி நிறுவனம் என்ற தனியார் தொழிலகத்தை இலக்கு வைத்து குண்டுகளை வீசின. இத்தாக்குதலால் தொழிலகத்தின் பலகோடி ரூபாய்கள் பெறுமதியான பொருட்கள் மற்றும் படகுகள் அழிந்துள்ளன.

இந்த தொழிலகம் அரசில் பதிவு செய்யப்பட்ட தனியார் தொழிலகமாகும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிறுவனம் ஆழிப்பேரலை அழிவின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 350 வரையான படகுகளை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் படகுத் தொழிற்சாலை ஒன்றின் மீது விமானப் படையினரின் சுப்பர் சொனிக் யுத்த விமானங்கள் நேற்றுக் காலை 6.30 மணியளவில் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

இரணை மடுவிற்கு மேற்கே முறிகண்டிப் பகுதியில் அமைந்திருந்த படகுத் தொழிற்சாலை மீதே இக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கத் தலைவர் தி.இராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்க வளர்ச்சி தொடர்பான பிரேரணைகள் முன் மொழிதல் 2004/2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வறிக்கை போன்றவை சமர்ப்பிக்கப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் நா.தனலிங்கம் கேட்டுள்ளார். (ச-4)

# இன்று ஒரு தகவல்

## இயந்திர வாழ்க்கை

''ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி நமது ஜனங்களுக்கு அவசியம் சொல்ல வேண்டும் சார்!'' என்றபடியே நண்பரொருவர் வந்தார். ''என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

''இந்தக் காலத்திலே கல்யாணமான ஆரம்ப நாட்களில் கணவன்–மனைவி இரண்டு பேரும் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துகிறார்கள். கொஞ்ச நாளிலே வாழ்க்கை ரொம்பவும் மெக்கானிக்கலாக ஆகிவிடுகிறது. கணவன்–மனைவி இரண்டுபேருமே வேலைக்குப் போகிறவர்களாக இருந்துவிட்டால் அது இன்னமும் மோசம்! குழந்தைகள் பாசம் என்றால் என்னவென்று தெரியாமலே வளர்கின்றன. இந்த நிலைமை நீடித்தால் எதிர்காலம் ரொம்பவும் மோசமாய் போய்விடும் சார்...'' என்றார். இதே கருத்தை கொஞ்ச நாட்களுக்கு முன்னால் வெளியூரிலேயிருந்து ஓர் அம்மாவும் எழுதியிருந்தார்.

கணவனும் மனைவியும் ஒரு நாளிலே கொஞ்ச நேரத்தையாவது செலவிட்டு ஒருவர் உணர்ச்சியை மற்றவர் புரிந்து கொண்டு நடந்தால் வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கேட்டிருந்தார். அந்த அம்மா! இல்வாழ்க்கை இயந்திரகதியாக ஆகிவிட்டால் நிலைமை எப்படி ஆகும். என்பதற்கு உதாரணமாக ஒரு புராணக் கதையையும் அவர்களே குறிப்பிட்டு எழுதியிருந்தார். அதைத்தான் இன்று உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

வாசஸ்பதி மிக்ரர் என்ற ஒருவர்–வடமொழிக் கவிஞர். பொழுது விடிந்து பொழுது போனால் எழுதுவதுதான் அவர் வேலை. வாழ் நாள் முழுவதையுமே இலக்கியங்கள் படைக்கிறதிலேயே கழித்தவர். ஒரு சமயம் ஒரு பெரிய நூலை எழுதிக்கொண்டிருந்தார். இராத்திரி நேரம். சிறிய விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்திலே ரொம்ப நேரமாக கண் விழித்து உட்கார்ந்து கொண்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் எழுதிக்கொண்டேயிருந்தார். அந்த நேரம் பலமான காற்று வீச ஆரம்பித்தது.

விளக்கு அணைந்து விட் டது. கொஞ்ச நேரம் ஒரே இருட்டு! மறுபடியும் விளக்கு மீண்டும் எரிய ஆரம்பித்தது விளக்கை ஏற்றியது யாரென்று அறிய நிமிர்ந்து பார்த்தார். ஒரு கிழவி நின்று கொண்டிருந்தாள். இவர் மிக மரியாதையாக அந்த அம்மாவைப் பார்த்து ''நல்ல நேரத்திலே வந்து உதவி செய்திருக்கிறாயே! யாரம்மா நீ'' என்று கேட்டார். அந்த அம்மாவுக்கு ஒரே திகைப்பு. ''என்ன இது? இப்படிக் கேட்கிறீர்கள். நான்தான் உங்கள் மனைவி பாமதி...'' என்றார்.

கவிஞருக்கு ஒரே அதிர்ச்சி ''என்ன? என் மனைவி பாமதியா? இவ்வளவு கிழவி ஆகிவிட்டாயே'' என்றார். ''ஆமாம்... நான்தான் இப்படி ஆகிவிட்டேன் நமக்குக் கல்யாணமாகி 50 வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. இலக்கியங்களைப் படைப்பதில் உங்கள் வயது ஆகிவிட்டது. உங்களுக்குப் பணிவிடை செய்வதிலேயே என் வயது போய்விட்டது... இன்று கொஞ்சம் அசந்து தூங்கிவிட்டேன். அதனால் தான் விளக்கு அணைந்ததை கவனிக்கவில்லை. என்னை மன்னித்து விடுங்கள் என்றார் அந்த அம்மா.

இதைக்கேட்ட கவிஞர் கலங்க ஆரம்பித்துவிட்டாராம். ஐம்பது வருஷ வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்த உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்... இதோ நான் எழுதிக் கொண்டிருக்கிற இந்த நூலுக்கு ''பாமதி'' என்று உன் பெயரையே சூட்டப்போகிறேன் என்றார். அதே மாதிரி செய்தும்விட்டார். அந்த நூலின் முதல் ஓலையிலே பாமதி என்று எழுதிவிட்டார். என்ன செய்து என்ன பிரயோசனம்? ஐம்பது வருட இல்வாழ்க்கை இனிமேல் திரும்பிவருமா?

இப்படித்தான் சிலப்பதிகாரத்திலும் ஒரு சம்பவம். மாதவியை பிரிந்து கண்ணகியை வந்தடைந்த கோவலன் கண்ணகியிடம் கேட்கிறான் ''நான் உன்னைப் பிரிந்திருந்த காலத்தில் நீ இழந்தது என்ன? கண்ணகி சொல்கிறாள்'' ''நான் இழந்தது என் இளமை.''

இப்படிப்பட்டவர்கள் இந்தக் காலத்தில் யாராவது இருந்தால் அவர்கள் கல்யாணமே செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது. கல்யாணம் செய்வது என்று தீர்மானித்தால் இல்வாழ்க்கையை முறையாக நடத்த வேண்டும். அதுதான் மரியாதை. சிலபேர் எந்த அளவுக்கு இயந்திரமயமாக இருக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். ஒரு கணவர் தினமும் காலை உணவு சாப்பிடும் விதம் எப்படித் தெரியுமா? சாப்பாடு தயார் என்று சொன்னால் போதும். உடனே அன்றைய காலைப்பத்திரிகையை பிரித்து கையிலே வைத்துக்கொள்வார்.

வீட்டுக்கார அம்மா காலை உணவை கொண்டுபோய் இவர்முன் வைப்பார். இவருடைய கண்ணும் கருத் தும் பத்திரிகையிலேதான் இருக்கும். கைமாத்திரம் உணவை எடுத்து வாயிலே போட்டுக்கொள்ளும். இதை அந்த அம்மர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். ஒரு முக்கிய நாள் வந்தது அவர்களுடைய கல்யாண நாள்!

அன்று காலை அவர் வழக்கம் போல காலை உணவருந்த உட்கார்ந்தார். பேப்பரும் கையுமாக மனைவி அவர் அருகில் நின்று கொண்டு சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

இவரும் வழக்கம் போல பேப்பரில் கண்ணும் உணவில் கையுமாக இருந்தார். சாப்பாடு எப்படி, மனைவி கேட்டார். ''கல்யாண நாளென்று இன்று கேக் செய்திருக்கிறாயா நல்ல ருசியாக இருக்கிறது என்றார் கணவர் ''கொஞ்சம் முகத்தை திருப்பி தட்டிலே என்ன இருக்கிறது என்று பாருங்கள்'' என்றார் மனைவி.

இவரும் மெதுவாகத் தலையைத் திருப்பித் தட்டைப் பார்த்தார். அங்கே இருந்தது என்னதெரியுமா? மாட்டுக்கு வைக்கும் புண்ணாக்கு.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# ஊழல் மோசடிகளில் ஈடுபடாதவர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் இல்லை

## ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் உரை

எமது உயிர்களைக் கொடுத்தாவது சர்வதேச ஏகாதிபத்தியத்தை ஒழித்துக்கட்டுவோம். சூழ்ச்சிக்காரர்களான ஐ.நா.விடமிருந்து எமது தாயக பூமியை மீட்போம். அதற்கான சக்தி ஜே.வி.பி.யிடம் உள்ளது. என்று அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் கார்த்திகை வீரர்கள் தினம் அண்மையில் மஹரகமையிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரில்வின்சில்வா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

இன்று எமது நாட்டில் புதிய கலாசாரம் உருவெடுத்துள்ளது. அற்ப சொற்ப ஆசைகளுக்கும் நிரந்தரமில்லாத அமைச்சுப் பதவிகளுக்கும் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி விட்டுக் கட்சி தாவிக் கொண்டிருக்கின்றனர்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடாதவர்கள் இன்று மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திலும் சரி ஏனைய எதிர்க்கட்சிகளிலும் சரி ஒருவரும் இல்லை என்றே கூறலாம். இது பொது மக்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். இப்படியானவர்களுக்கும் இவர்களது கட்சிகளுக்கும் என்ன கொள்கை இருக்கின்றது? ஆனால், ஜே.வி.பி. என்ற கட்சிக்கு ஒரு தனிப் பெரும் கொள்கை இருக்கின்றது. அமைச்சுப்பதவிகளுக்கும் பசப்பு வார்த்தைகளுடனான அற்ப ஆசைகளுக்கும் சோடைபோகாத பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். அவர்கள் தான் எமது தலைவர் வளர்த்துவிட்ட கட்சியின் வழிவந்தவர்கள் திறந்த பொருளாதரத்தை அறிமுகப்படுத்தி இந்த நாட்டின் உற்பத்தி மழுங்கடித்த ஐக்கிய தேசிய கட்சி இன்று எமது தாயக பூமிக்குள் அந்நியர்களின் ஆதிக்கத்தை ஆதரித்து வருகின்றது.

1989ஆம் ஆண்டு எமது தலைவரை படுகொலை செய்து, ஆயிரக்கணக்கான சகோதரர்களை கொன்று குவித்தது. அவர்கள் அனைவரும் எமது நாட்டுக்காக தமது உயிர்களை தியாகம் செய்தனர்.

அதேபோல், எமது உயிர்களைக் கொடுத்தாவது சர்வதேச ஏகாதிபத்தியத்தை ஒழித்துக்கட்டுவோம். சூழ்ச்சிக்காரர்களான ஐ.நா.விடம் இருந்து எமது தாயக பூமியை மீட்போம். அதற்காக சக்தி ஜே.வி.பி.யிடம் உள்ளதே தவிர ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியிடமோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சியிடமோ இல்லை.

இலங்கையின் வளங்களை சூறையாடுவதற்கும் அமைதிப்படை என்ற ஐ.நா.வின் தந்திரோபாயங்களுக்கும் முற்றுப் புள்ளிவைத்து புதிய இலங்கையை நிர்மாணித்து அதில் புதியதொரு சமூகத்தை உருவாக்குவதே ஜே.வி.பியின் கொள்கையாகும். சிலர் ஜே.வி.பி. பழைய கட்சியைப்போல் செயற்படுவதில்லை என்றும் விட்டுக்கொடுக்கும் தன்மை இல்லை என்றும் கூறுகின்றனர்.

இந்த விடயங்களில் ஜே.வி.பி. பெருமிதம் அடைகின்றது. ஜே.வி.பி. என்பது பழைய கட்சியல்ல. அது தினம் தினம் புதுப்பிக்கப்படுகின்ற கட்சியாகும். புதிய சிந்தனைகளுடன் புதிய தீர்வுகளை முன்வைத்து உரிய நேரத்தில் தீர்க்கமான நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சி ஜே.வி.பி.யாகும்.

அத்தோடு இந்நாட்டில் உள்ள இருபெரும் கட்சிகளுமே கொள்கையில்லாத கட்சிகளாக உள்ளன. மேலும் நம்பிக்கைக்கு பாத்திரமாக இவைகள் நடந்து கொள்வதில்லை. அரசாங்கம் ஊழியர்களின் சம்பளப்பிரச்சினை, கொடுப்பனவுபிரச்சினை மற்றும் தொழில் பிரச்சினை என ஒன்றிலுமே அக்கறையில்லாத அரசாங்கமாக இருக்கின்றது. ஊழல் மலிந்து கிடக்கின்றது.

மறுபுறம் ஐக்கிய தேசியக்கட்சியானது நாட்டை வெளிநாட்டவர்களுக்கும் தீவிர வாதத்துக்கும் காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளையே செய்துவருகிறது. இப்படியான கட்சிகளின் தீர்மானங் களுக்கு ஜே.வி.பி.எப்படி விட்டுக்கொடுப்புகளில் இறங்க முடியும். இது முடியாத காரியம்.

எமது தாய்நாட்டைக் காப்பாற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால், நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், அதற்கான முழு சக்தியும் ஜே.வி.பி.க்கே உள்ளது. (அ–5)

# இராசிபலன்

17.11.2007
(கார்த்திகை 01, சனிக்கிழமை)
சப்தமி முற்பகல் 11.37 மணிவரை
திருவோணம் முற்பகல் 10.00 மணிவரை
இராகுகாலம் 09.08–10.38 மணிவரை
சுபநேரம் 03.08–04.38 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தொழில் விருத்தி, பிறர் உதவி, போசன நன்மை, முயற்சி கைகூடும். |
| இடபம் | திடீர் பயணம், எதிர்பாராத செலவு, பிதாசிந்தை புதிய திட்டமிடல். |
| மிதுனம் | காரியதடங்கல், தர்மம், உடல்நலக் குறைவு, அச்சமான சூழல். |
| கடகம் | பணவருவாய், வாகனவசதி, நல்ல வரவேற்பு, எடுத்தகருமங்கள் கைகூடும். |
| சிங்கம் | சுவாரஸ்யம், தேகாரோக்கியம் பகைவரால் நன்மை, காரிய அனுகூலம். |
| கன்னி | வியாபார விருத்தி, மனச்சஞ்சலம், சிறுவியாதி, வேலைச்சுமை. |
| துலாம் | சிந்தனை மிகுதி, உறவினர் சந்திப்பு, ரோகநிலை, மனப்பயம். |
| விருச்சிகம் | மனோதைரியம், மாதர்நட்பு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| தனுசு | உணர்ச்சிவசப்படல், காரியதாமதம், பணவிரயம், கெளரவக்குறைவு. |
| மகரம் | வெகுமானம், கெளரவமான நிலை, போசனநன்மை, புதிய முயற்சி. |
| கும்பம் | பிரயாணம், சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம். |
| மீனம் | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, காரியநன்மை, கீர்த்தியடைதல். |

வ ள வ ன்

# அடுத்த வருடம் முதல் அபிவிருத்திப் பணிகளிலும் கிராம சேவகர்கள் பங்கெடுக்க வேண்டும்!

## அமைச்சர் கரு ஜயசூரிய அறிவிப்பு

தமது தொகுதியில் அமுல் படுத்தப்படும் அரச அபிவி ருத்தித் திட்டங்களில் ஒவ்வொரு கிராம சேவகரும் அடுத்த வருடம் முதல் பங்குபற்றவேண்டும் என பொது நிர்வாக உள்நாட்டு அலு வல்கள் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இப் பணியில் அவர்களை வழிநடத்தும் பொறுப்பை மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேசச் செயலாளர்கள் ஆகியோர் ஏற்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் அரசாங்கத்தால் மேற்கொண்டுவரப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் கிராம சேவகர்களின் பங்களிப்பை எந்த வகையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பது பற்றிய திட்டத்தை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான செயற்பாடுகளைகண்காணிப்பதற்குஅமைச்சு மட்டத்திலான குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சர் கரு ஜெயசூரிய நடவடிக்கை எடுத்துள்ளார். அத்துடன் பிரதேச அபிவிருத்திப் பணிகளை மேற் பார்வை செய்வதற்கு கிராமிய, சமூக தலைவர்களைக் கொண்ட குழுவொன்றைஅமைப்பது பற்றியும் அமைச்சு ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ–5)

# இலங்கை விமானப்படைக்கு பாகிஸ்தான் உதவவில்லை

பிரபாகரனுக்கு எதிராக விமானப் படையினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் விமானப் படையினர் உதவி வழங்கி வருவதாக இந்தியாவின் 'ரோ' புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் பீ. இராமன் வெளியிட்டிருந்த தகவலை இலங்கைபாதுகாப்பு அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

பாகிஸ்தான், இலங்கையின் அரசியல் சார் இரகசிய விடயங்களிலும் தலையிட்டதில்லை. மாறாக புலிகளுக்கு இராணுவ பயிற்சிகளையும் வழங்கி, அவர்களுக்குயுத்த ஆயுதங்களையும் இந்திய 'ரோ' புலனாய்வுப் பிரிவினரே வழங்கியுள்ளனர். ரோ புலனாய்வுப்பிரிவின் தலைவராக இருந்த காலத்தின் போதும் இராமன் புலி களின் சகல நடவடிக்கைகளுக்கும் தமது ஒத்தாசைகளை வழங்கி அவர்களுக்கு உதவி வந்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை இல்லாமல் செய்வதற்கு இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் சிதறடிப்பதையேஇந்திய ரோ புலனாய்வுப் பிரிவினர் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் என அவர்மேலும்தெரிவித்தார். (15.11.2007 திவயின)



உரும்பிராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையத்தில் வாணி விழாவின் போது கலந்துகொண்டோரை படத்தில் காணலாம்.

# அரசுக்கு நேரடியாக நிதியுதவிகள் வழங்குவதை நிறுத்த இணைத் தலைமை நாடுகள் முடிவு !

## சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஊடாகவே நிதியுதவி !!

**அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள இணைத் தலைமை நாடுகள் இலங்கைப் பிரச்சினை குறித்த புதிய அணுகுமுறையை கடைப்பிடிக்கப் போவதாக தெரிவித்துள்ளன.**

இதன் அடிப்படையில் அடுத்த ஆண்டு முதல் இலங்கைக்கான அனைத்து நிதியுதவிகளும் ஐ.நா .முகவர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஊடாகவும் வழங்கப் படவுள்ளதாக தெரியவருகிறது. இராணுவ ரீதியான அணுகு முறை யில் அரசாங்கம் காண்பிக்கும் ஈடுபாடு , வன்முறைகள், சிறுவர்களைப் படை யணிகளில் சேர்த்தல் என்பவற்றில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ஈடுபடுதல் போன்றவற்றால் இணைத் தலைமை நாடுகள் மிகவும் கவலை யடைந்துள்ளதாக இராஜதந்திரத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன சமாதானச் செயற்பாடுகள் தொடர்பில் போதிய அக்கறையை செலுத்த தவறியுள்ளனர். இது தொடர்பில் சர்வதேச சமுகத்தின் வேண்டுகோளை இரு தரப்பும் கவனத்தில் எடுக்க வில்லை.

அத்தோடு இருதரப்பினா லும் சர்வதேச சமூகத்துக்கு வழங்கப் பட்ட உறுதிமொழிகளும் காப்பாற் றப்படவில்லை.

இந்நிலையில் இலங்கைப் பிரச் சினை தொடர்பாக இணைத்தலை மை நாடுகள் தற்போது கடைப் பிடித்து வரும் அணுகு முறையில் மாற்றம் செய்ய தீர்மானித்துள்ளன. இருதரப்பும் சமாதான பேச்சுவார்த் தைக்கு கொடுக்கக் கூடியதாக இக் கொள்கை மாற்றம் அமையும் என இராஜதந்திரிகள் தெரிவிக்கின்ற னர்.

இதனடிப்படையில் இலங் கைக்கு உதவி வழங்கும் இணைத் தலை மை நாடுகள் அடுத்த ஆண்டு முதல் இலங்கைக்கான சகல நிதியுதவி களையும் ஐ.நா.வின் முகவர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஊடாக வழங்குவதற்கு தீர்மானித் துள்ளன.

இலங்கை அரசாங்கத்துக்கு அடுத்த ஆண்டு முதல் நேரடியான நிதியுதவிகள் வழங்குவதை நிறுத்து வதற்கு இணைத்தலைமை நாடு கள் முடிவு செய்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. (அ-5)

## 'இதோ வருகின்றார்' சத்தத்தினால் சபையில் குழப்பமடைந்த அமைச்சர்

(கொழும்பு)

அரசாங்க தரப்பிலிருந்து எதிர்த் தரப்பிற்கு உறுப்பினர் ஒருவர் மாறி வருகின்றார் என்று எதிரணி உறுப்பி னர் ஒருவர் கிளப்பிய சத்தத்தினால் ஆளுந்தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோ புள்ளே வியாழக்கிழமை சபை யில் குழப்பமடைந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றம் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டார தலைமையில் கூடிய போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது பதில்களை சமர்ப்பிப்பதற்காக அமைச்சர் ஜெய ராஜ் பெர்னாண்டோ புள்ளே தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்றார். அப்பொழுது தனது ஆசனத்திலி ருந்து திடீரென எழுந்த ஐக்கிய தேசி யக் கட்சியின் குருணாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அரச தரப்பை பார்த்து இதோ வருகின்றார், இதோ வருகின் றார் என்று சத்தமிட்டார்.

வாய்மூல விடைகளுக்கு பதிலளிப் பதற்கு எழுந்து நின்ற அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குழம்பிப் போய் அரச பக்கத்தின் நாலாபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தார். நாலாபக்கமும் திருப்பிப் பார்த்த அமைச்சரைப் பார்த்து எதிர்க் கட்சியினர் கூச்சலிட்டு சிரித்தனர். அதனை சுதாகரித்துக் கொண்ட அமைச் சர் ஜெயராஜ் உண்மையில் யாராவது செல்கின்றனரா என்று தான் திரும் பிப் பார்த்ததுடன் இன்னும் 48 மணித் தியாலத்தில் நடக்கப் போவது என்ன? என்று தெரியவரும் என்றார். (அ-5)

## ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 82ஆவது அவதார நிகழ்வு

பருத்தித்துறை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய சாயி மந்திரில் பகவான் சத்திய சாயிபாபாவின் 82 ஆவது அவதார தின நிகழ்ச்சிகள் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிலையத் தலைவர் கு.இ.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பாளரும், வடபிராந்திய சத்திய சாயி இளைஞர் பிரிவு இணைப்பாளருமான வைத்திய கலாநிதி இ.சிவசுங்கரின் சிறப்புச் சொற்பொழிவுடன் வேறு பல பக்தி நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (அ-19)

## திருவாசகம் முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் வருடம் முழுவதும் பன்னிரு திருமுறை பதிகங்கள் முழுவதையும் மாதம் ஒரு முறை முற்றோதல் என்ற ரீதியில் ஆலயங்கள் தோறும் ஓதி வருகின்றனர். இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, கடையிற் சுவாமி குருவார அன்னசத்திர சிவன் ஆலயத்தில் கார்த்திகை மாதம் முதலாம் திகதியான இன்று காலை 7.30 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் நடைபெறும். (அ)

## 'ஈழநாடு' சிறுகதைகள்

வட மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சு, கடந்த காலங்களில் 'மறுமலர்ச்சிச் சிறு கதைகள்', 'ஈழகேசரி சிறுகதைகள்' என்று இரண்டு பாரிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டு ஈழத்து இலக்கியத்திற்கு அளப்பரிய பங்களிப்பு செய்துள்ளது போல் இத் தடவையும் ஈழநாடு சிறுகதைகள் இரு தொகுதிகளை வெளியிட அமைச்சின் செயலாளர் இளங்கோவன் முன்வந்துள்ளதாகவும், இரண்டு தொகுதிகளிலும் 101 சிறுகதைகள் இடம்பெறவுள்ளதாக செங்கையாழியான் க.குணராசா அறிவித்துள்ளார்.

கீழ்தரப்படும் கதைகளின் படைப்பாளிகள் அவர்களது புகைப்படம் ஒன்றையும், அவர்களைப்பற்றிய இலக்கியத் தகவல்களையும் செங்கையாழியான் க.குணராசா 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி இவற்றை ஆவணப்படுத்தி பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கலாநிதி குணராசா கேட்டுக் கொண்டுள்ளார் கதைகளினதும், படைப்பாளிகளினதும் பெயர் விபரங்கள் வருமாறு,

### தொகுதி 1

மனிதன் -சம்பந்தன், கடலிலே ஒரு மீன்-இலங்கையர்கோன், சோம லதை-அ.செ.மு, குரு-சொக்கன், வெந்தணலால் வேகாது...-வ.அ. இராசரெத்தினம், நாடற்றவனும் நானும் -சிவி. வேலுப்பிள்ளை, தொண்டர் இருவர் -சு.வே., இளம் மனைவி - தாளையடி சபாரெத்தினம், கடமை கடமை -கச்சாயில் இரத்தினம், பிட்டு - கனகசெந்திநாதன், மஞ்சள் கயிறு - புதுமைலோலன், காதல் காற்சட்டை - அல்வாயூர் மு.செல்லையா, இரு தார மணம்-தேவன் யாழ்ப்பாணம், அபேட்சகர் அம்பலத் தார்-எஸ்.எஸ். சவுந்தரநாயகன், கண்காட்சி -இ.நாகராஜன், சா நிழல் - கே.டானியல், உள்ளுணர்வு -எஸ். அகஸ்தியர், புயல்-மயில்வாகனன், தர்மபூமி-துரைசுப்பிரமணியம், கள்ளும் கருப்ப நீரும் - கே.வி. நடராஜன், கங்குமட்டை - செங்கையாழியான், ஒரு ஞாயிற்றுக்கிழமை - செம்பியன் செல்வன், வடு -செ.யோகநாதன், தாய் - செ.கதிர்காமநாதன், நிலவு இருந்த வானம் -கைலாசநாதன்,

வியாபாரம் -துருவன், விநாயகர் உகந்தது -நவாலியூர் நடேசன், தெய்வப் பணி-அப்பச்சி மகாலிங்கம், இலட்சியம் -நகுலன், நெஞ் சில் ஒரு முள் - பெரி.சண்முகநாதன், உத்தியோக நாற்காலி-மருதூர்க் கொத்தன், ஜீவநதி -பவானி, சுமை தாங்கி-பெனடிக் பாலன், அமரா வதிச் சிலை -மு.கனக ராசன், ஆணி வேர் -ஜோவலன் வாஸ், ரிஷி மூலம்- ஆரையம்பதி தங்கராசா, நான் தோற்றுவிட்டேன் -தெணியான், பெண்ணின்பெருமை பா.பாலேஸ்வரி, கிணறு- து.வைத்திலிங்கம், அவலம்-அராலியூர் நா.சுந்தரம்பிள்ளை, காட்டுக்கோழி -த.சண்முகசுந்தரம், தொல்லை இனி இல்லை -கீழ்க் கரவை பொன் னையள், தெளிவு - சிதம்பரபத்தினி, பூபாளராகம்-மாத்தளை வடிவேலன், நீர்க்குமிழி -வண்ணை தியாகராசா, வேட்டைப் புலி-பொ.சண் முகநாதன். ஒரு சோடி காப்பு - தையிட்டி இ.இராஜதுரை, முடிந்த வாழ்வு - எஸ்.சண்முகநாதன், முழு மை-ஜோர்ஜ் சந்திரசேகரன், நிலவும் நிழலும்- இ.செ.கந்தசாமி.

### தொகுதி 2

ஒரு வழிப்பாதை-இரா.சிவச்சந்திரன், கருகிய மொட்டு -வட்டூர் கானம். பாசம்-மலைய மான், சரண்-பாமா ராஜகோபால், தானம்... -பிலிப் ஜேக்கப், கண்ணீர் தரும் பதில்-க.ஜீவரெத்தினம். சந்நிதி கோயில் சாப்பாடு - உடுவை தில்லை நடராஜா, சுமைதாங்கி சுமையாகிய போது - காவலூர் எஸ்.ஜெகநாதன். ஒலிக் காத ஓலம் - கோகிலா மகேந்திரன், ஏழைக ளும் ஆசைகளும் - செ.குண ரெத்தினம், வாழ்வை வசந்தமாக்கி... -எஸ்.பி. கிருஸ்ணன், நினை வுச் சிலுவைகள்-வாகரைவாணன், அபிராமி ஓர் தொடர் கதை -சரவணையூர் மகேசேகரன்,

புயலில் ஒரு கொடியும் கொம்பும் - மா.பால சிங்கம், சுமங்கலி-தி.ஞான சேகரன், சொக்கட்டியின் மகன்- நெல் லை க.பேரன், பைத்தியங்கள் -குப்பிளான் ஐ.சண்முகம், வேட்டை -நந்தினி சேவியர், ஒரு துறவியின் கதை - எஸ்.வன்னியகுலம், ஊர்வலம் செல் கிறது -கே.ஆர்.டேவிட், புனித சங்கமம்-மு.திருநாவுக்கரசு, பன்னீர் த்துளிகள் - வளவை வளவன், திசை கள் விலகு கின்றன- ச.முருகானந் தன், செய்தி வேட்டை- தேவி பரம லிங்கம்,

உயிரின் ஆராதனை-வட கோவை வரதராசன், இரசனைகள் - கோப்பாய் எஸ்.சிவம், அவள் கூறிய பதில்- கலைவாதி கலீல், வழி பிறந் தது-புலோலியூர் இரத்தினவேலோன், விழிப்பு -இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன், எதிர்பார்ப்புக் கள்-தாமரைச் செல்வி, அவள் அகதியில்லை -திருமதி சிவயோக மலர் ஜெயக்குமார், அழகின் குரூரங் கள்- ஆனந்தி, தெய்வப்பூ-ஸ்ரீரங் கன், அவன் மனிதன்-த.இந்திர லிங்கம், அட்டமிச் சந்திரன் -காங்கேயன், சுயரூபம்-பன்னீரன், நிர்ப் பந்தம் - ராஜம் புஸ்பவனம்,

பிரிவும் துயரமும்- வல்லை ந. ஆனந்தராஜ், பிரம்மதேவன் பெஞ் சன் எடுக்கிறான் -வி.ரி.தமிழ்மாறன், பாதரபிம்பங்கள்-சி.சுதந்திரராசா, சேவலும் பேடும் -அனலை ஆறு இராசேந்திரம்.

பார்வைகள் கோணலாகும் போது - தமிழ்பிரியா, ஆத்மாவின் உயிர்ப்புக்கள் -கணபதிகணே சன், அவள் துயில் கொள் கிறாள்-மண்டை தீவு கலைச் செல்வி. ஒருமலர் உதிர் கிறது-கவிதா, தாய்-சி.கதிர் காம நாதன்,

தியாகமெனும் தீ- சிவமலர் செல்லத் துரை, மடமையை கொளுத்துவோம் - சந்திரா தியாகராஜா, தாகம்- இயல்வாணன். அவன் வீடு திரும்பவில்லை -க.கிருஷ் ணசிங்கம், அகதிமுகாம் -பா. சிவ பாலன். (அ-6)

## 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை அரசின் பொய்யான வாக்குறுதி

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவிப்பு

வேலையற்ற பட்டதாரிகள் இணைந்த சங்கம் அடுத்த வருடத்தில் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென்று அரசு பொய்யான வாக்குறுதியை வழங்கியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் சங்க அமைப்பாளர் சுயித் குருவிற்ற கூறுகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான அரசு 2008 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்திலும் மஹிந்த சிந்தனை திட்ட நடவடிக்கையிலும் பொய்யான வாக்குறுதிகளை விடுத்துள்ளது என்றார். அத்துடன் மஹிந்த சிந்தனையின் படி இதுவரை 15ஆயிரம் பட்டதாரி களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி இருக்க வேண்டுமென்றும் இதுவரை ஒருவருக்குக் கூட வேலைவாய்ப்பு வழங்கவில்லை என்றும் கூறினார். இரண்டு வருடங்களாக காத்திருந்து இறுதியில் அரசுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டு போராட்டம் நடத்தி யதாகவும் அப்பொழுது பொலிஸாரைக் கொண்டு அதனைத் தடுத்ததன் மூலம் அரசினால் என்ன செய்ய முடியும் என்பதனை வெளிக்காட்டியதென்றார். 2004ஆம் ஆண்டு ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களிளில் வேலை வாய்ப் பளிக்கப்பட்டது. மேலும் 20ஆயிரம் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டிள்ளது. ஏழை மக்களிடமிருந்து திரட்டப்படும் வருமான வரியின் 90 வீதம் அமைச்சர்களினதும் நண்பர்களினதும் உறவினர்களினதும் பராமரிப்புக்கு செலவாகிறது என்றும் கூறினார். மேலும் தான் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் ஆதரவைப் பெறவேண் டியதில்லை. எமது எதிர்ப்பு நடவடிக் கையின் பின்னர் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் பட்டதாரிகளை பணிக் கமர்த்துவதற்கான நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஆனால் நாங்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக் கை வைக்க முடியாது எனத் தெரிவித்தார்.

அமைச்சர் சியாம்பலாப்பிட் டியா விடம்பட்ட தாரிகளை நியமிப்பதற்கான பணத்தைக் காட்டுமாறு சவால் விட்டார். சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பாதுகாப்பு அமைச்சு செயலாளரிடம் கோட்டை பொலிஸ் மற்றும் DIG நிமால் மெடிவகே ஆகி யோருக் கெதிராக நவம்பர் 5ஆம் திகதி தமது போராட்ட உரிமையை தடைசெய் தமை பற்றி முறைப்பாடு எடுத்துள்ளதாக வும் தமது அடுத்த நடவடிக்கை பற்றி இம்மாதத்தின் பின் முடிவு எடுக்கவுள்ளதாகவும் தேசிய தொழிற்சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மும் தமக்கு ஆதரவு வழங்கும் என்றும் கூறியுள்ளார். (அ-6)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை இந்து மன்றக் கலைவிழாவையும் பரிசளிப்பு விழாவில் இந்து மன்றப் பொறுப்பாசிரியை திருமதி ஜமுனா நந்தகுமார் மங்கல விளக்கேற்றுவதையும், அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், மன்றச் செயலாளர் செல்வி வினோ பரமலிங்கம் ஆகியோர் நிற்பதையும், இந்து மன்றத் தலைவி செல்வி நிஷாலினி நந்தகுமார் தலைமையுரை நிகழ்த்துவதையும், அங்கு இடம்பெற்ற 'சிவசக்தி' நடனத்தில் செல்விகளான எஸ்.சிந்துஷா, கே.சுகந்தி ஆகியோர் தோன்றும்

# அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறுமாறு முஷாரப்புக்கு அமெரிக்கா தொடர்ந்து நெருக்கடி



(வாஷிங்டன்)

அவசர சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு அமெரிக்கா தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறது. இது குறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் பானாபெரினோ கூறுகையில்,

அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கும் போது, நேர்மையான, சுதந்திரமான தேர்தல் நடக்கவாய்ப்பு இல்லை. எனவே, அதிபர் முஷாரப் அவசர நிலையை ரத்து செய்ய வேண்டும். அமைதியான முறையில் போராட்டம் நடத்த அனுமதி அளிக்கவேண்டும்.

தேர்தல் குறித்த தகவலை வெளியிட ஊடகங்களுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும். முஷாரப் -பெனாசிர் இடையே அதிகாரப் பகிர்வு ஒப்பந்தம் ரத்தானது. மேலும் பதட்டத்தை அதிகரித்துள்ளது என்றார்.

இத்துடன் முஷாரப்பை நேரில் சந்தித்து பேச அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் ஜான் நெக்ரோபோண்டே இஸ்லாமாபாத் செல்கிறார். பாகிஸ்தானில் வக்கீல்கள் மீது அடக்குமுறை கையாளப்படுவதை கண்டித்து அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த வக்கீல்கள் நேற்றுமுன்தினம் கறுப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு பாகிஸ்தான் வான் எல்லை வழியாக தான் பெட்ரோலிய பொருட்கள் உள்ளிட்ட இதர பொருட்கள் எடுத்து செல்லப்படுகின்றன. பாகிஸ்தானில் தற்போது நிலைமை மோசமாக இருப்பதால், மாற்று வழியில் இப் பொருட்களை எடுத்து செல்வது குறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன்ஆலோசனை செய்து வருகிறது. அதே நேரத்தில் பாகிஸ்தான் இராணுவம் வசம் இருக்கும் அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளுக்கு கைமாறி விடும் என்ற அச்சம் இல்லை என்றும் பென்டகன் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிடம் 90 அணு ஆயுதங்கள் இருக்கலாம் என அமெரிக்கா நம்புகிறது. தற்போதைய பதட்டமான சூழ்நிலையில் அந்த ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் சிக்கிவிடும் என அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி ஒருவர் சில நாட்களுக்கு முன் அச்சம் தெரிவித்திருந்தார். அதுபோல நடக்க வாய்ப்பு இல்லை என பென்டகன் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி யாக இருந்தவர் இப்திகார் முகமது சவுத்ரி. கடந்த 3 ஆம் திகதி அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தியதை அவர் ஏற்கவில்லை. எனவே, வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவருக்கு பதிலாக வேறு ஒருவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து வீட்டுக் காவலில் இருக்கும் சவுத்ரி உயர்நீதிமன்ற பதிவாளருக்கு ஒரு உத்தரவை அனுப்பியுள்ளார். அதில் தன்னை குவெட்டா அல்லது வேறு பகுதிக்கு அழைத்து செல்ல முயற்சி நடக்கலாம். இது கடத்தலுக்கு ஒப்பானது. எனவே, இஸ்லாமாபாத்தை விட்டுதன்னை வெளியே அழைத்து செல்வதைத் தடுக்க வேண்டும் என அந்த உத்தரவில் சவுத்ரி குறிப்பிட்டுள்ளார்.

உலக தரிசனம்

### வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட பெனாசிர் திடீர் விடுதலை

பாகிஸ்தானில் கடந்த 3ஆம் திகதி அவசர காலச்சட்டத்தை அதிபர் முஷாரப் அமுல்படுத்தினார். இதைய டுத்து முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் இரவோடிரவாக கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அவசர காலச் சட்டத்தை ரத்துச்செய்யக் கோரியும் இராணுவத் தளபதி பதவியை இராஜினாமாச் செய்யக் கோரியும் முன்னாள் பிரதமர் பெனாசிர் கடந்த 13ஆம் திகதி லாகூரிலிருந்து இஸ்லாமாபாத்துக்கு தடையை மீறி பேரணி புறப்பட்டார். ஆனால் பேரணி புறப்படுவதற்கு முன்பே பொலிஸார் அவரை சுற்றிவளைத்து லாகூரில் வீட்டுக்காவலில் வைத்தனர். பெனாசிர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது இது இரண்டாவது தடவை.

அவரை 7 நாள் காவலில் வைக்க கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. பெனாசிரை விடுதலை செய்யும்படி யும் அவசர காலச் சட்டத்தை ரத்து செய்து ஜனநாய ரீதியில் தேர்வு நடத்தும்படியும் அமெரிக்க அதிபர் புஷ் தொடர்ந்து வலியுறுத்தி வந் தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை பெனாசிர் திடீரென்று விடுதலை செய்யப்பட்டார். அவரது வீட்டுக் காவல் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனாலும் அவரது வீட்டைச் சுற்றி பொலி ஸார் காவலுக்கு நிற்கிறார்கள். பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள்யாரும் வீட்டுக்குள் அனுமதிக்கப்படவில்லை. பெனாசிருக்கு பாதுகாப்புக்கருதி இந்தநடவடிக்கை என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இந்தநிலையில் முஷாரப்புக்கு எதிராக பெனாசிர் ஆதரவாளர்கள் போராட்டம் நீடிக்கிறது.



கராச்சியில் பாகிஸ்தான் மக்கள் கட்சி தொண்டர்கள் நடத்திய போராட்டத்தில் பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினார்கள்.

இதில் குண்டு பாய்ந்து 2சிறுவர்கள் பலியானார்கள். இந்தநிலை டிசம்பர் முதலாம் திகதி தளபதி பதவியிலிருந்து விலகுவதாக முஷாரப் அறிவித்துள்ளார்.

### காபந்து பிரதமர் நியமனம்

இந்நிலையில் பாராளுமன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவில் கலைக்கப்பட்டது. இடைக்காலப் பிரதமர் ஒருவரை முஷாரப் நியமித்துள்ளார். அந்நாட்டு மேல் சபைத் தலைவர் முகமத் மியான் சூம்ரோ, காபந்து பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். முஷாரப்பின் நெருங்கிய கூட்டாளியான அந்நிய நாட்டு ரயில்வே அமைச்சர் ஷேக் ரஷீத் அகமத் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதனிடையே முஷாரப் தனது இராணுவத் தளபதி பதவியை டிசம்பர் 1ஆம் திகதி இராஜினாமா செய்வார் என்று அந் நாட்டு அரச வழக்கறிஞர் மாலிக் கயூம் தெரிவித்துள்ளார். முஷாரப்பின் பதவிக்காலம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துவிட்டபோதிலும் புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அவர் பதவியில் நீடிப்பார் என்று கயூம் தெரிவித்துள்ளார். முஷாரப் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணை அடுத்த வாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)

## வயினாபிஷேகம்



மொபாக் குடிகார்களை, அவன் தண்ணியிலேயே எப்போதும் மிதக்கிறான் என்பார்கள். நம்ஊரில்மதுவில் குளிப்பது அனைவருக்கும் சாத்தியமில்லாத விஷயம். ஆனால் ஜப்பான் தலைநகர் டோக்கி யோவிலிருந்து 100 கி.மீ தொலை வில் உள்ள கனகவா என்ற இடத்தில் உள்ள யுனேசன் ரிசார்ட்டில் வயினில் குளிக்கிறார்கள் இவர்கள். (அ-5)


## தாய்லாந்து நாட்டில் யானைக்கும் மருத்துவமனை



யானைகள் என்றாலே தாய்லாந்து நாடு தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு அங்கு யானைகள் அதிகளவில் வளர்க்கப் படுகின்றன. யானைகளுக்கென தனி மருத்துவமனை கட்ட தாய்லாந்தில் திட்டமிட்டுள்ளனர்.

அதற்கு நிதி திரட்டுவதற்காக கண்ணைக் கவரும் வண்ணங்களில் பெரிய யானை பொம்மைகளைத் தயாரித்து , பல நாடுகளில் காட்சிக்கு வைத்து வருகின்றனர். நெதர்லாந்து நாட்டின் ரோட்டர்டாம் நகரில் நடந்த கண்காட்சி இது. இதில் வசூலாகும் தொகை ,யானைகள் மருத்துவமனை கட்ட பயன் படுத்தப்படும். (அ-5)

## பளபளப்பதெல்லாம் வைரமல்ல



'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்றபழமொழியை பளபளப்பதெல்லாம் வைரமல்ல என்று மாற்றிக்கொள்ளலாம். ஆம் இந்த காரை பளபளக்க வைப்பது நிஜமான வைரம் என்று நினைத்து விடாதீர்கள். வைரம் போன்ற ஒரு பொருள்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலிஸ் நகரில், வருடாந்திர கார் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்ற மெர்சிடிஸ் நிறுவனத்தின் இந்த கார், பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. மேலும் பல்வேறு விதமான நவீன கார்கள் இக் கண்காட்சியில் இடம்பெற்றன. (அ-5)


## அரசாங்க அறிவித்தல்

### யாழ்.மாவட்ட செயலகம்

### அலுவலக இயந்திரங்களும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வழங்குவதற்கான கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களுக்கு தேவையான பின்வரும் அலுவலக இயந்திரங்களும் அவற்றிற்கான உதிரிப்பாகங்களும் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 200/- உம் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 5,000/-உம் செலுத்துதல் வேண்டும். பொருட்களை கொழும்பில் வழங்குவதற்கான கூறுவிலைகளும் அவற்றை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் வழங்குவதற்கான கூறுவிலைகளும் தனித் தனியாகக் கொடுக்கப்பட வேண்டும். மேலும் இயந்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் உத்தரவாத காலத்திற்கான சேவைகளும் அதற்குப் பிந்திய பராமரிப்பு சேவைகளும் யாழ்ப்பாணத்தில் செய்து கொடுக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப்படிவத்தையும், பொருட்கள் தொடர்பான விபரத்தையும் நிபந்தனைகளையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட் களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.4.00மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை, மாவட்டச் செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு, மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் *அலுவலக இயந்திரங்களும் அவற்றிற்கான உதிரிப்பாகங்களும் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம்* என குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 30.11.2007ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் பெட்டி மூடப்பட்டு உடனடியாக அதேநேரம் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

*1) அலுவலக இயந்திர உதிரிப்பாகங்கள்*

a) Spare parts for Photocopier
b) Printer Ribbons
c) Cartridges for Printers and Faxes
d) Toners for Photocopiers and Printers
e) Computer KeyBoards
f) Computer Mouses

*2) றோணியோ இயந்திரம்*

a) Rhonio Machine (Manual)
b) Digital Copy Printer

*3) பக்ஸ் இயந்திரம்*

**கே.கணேஷ்,**
**தலைவர், கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/550)



# செயலற்றிருக்கும் மனிதனின் எண்ணங்களை சொற்களாக மொழிபெயர்க்க முடியும்

## போஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிப்பு

முற்றிலும் பேச முடியாது செயலிழந்து போயிருக்கும் மனிதனின் சிந்தனைகளை சொற்கள் உருவில் மொழிபெயர்க்க முடியும் என்பது ஆரம்ப கட்ட பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

கார் விபத்தொன்றை அடுத்து கடந்த 8 வருடங்களாக நினைவுகள் பாதிக்கப்படாத நிலையில் செயலிழந்து காணப்பட்ட எரிக் ராம்சே என்பவரின் மூளையில் இலத்திரனியல் உணர்கருவிகளைப் பொருத்தி அவதானித்த விஞ்ஞானிகள், இந்த உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

இதன்போது பேச்சுக்குரிய மூளையின் பகுதியிலான அதிர்வலைகள் துடிப்புகளாக பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு பெற்ற தரவுகளை பகுப்பாய்வு செய்த போஸ்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மேற்படி விஞ்ஞானிகள் எரிக் ராம்ஸேயின் மூளையானது தரவுகள் எடுக்கப்பட்ட மொத்த நேரத்தில் 80 சதவீதமான காலப்பகுதியில் பேச்சுக்கான பிரதிமையை வெளிப்படுத்தியதாக தெரிவித்தனர்.



இதனையடுத்து மேற்படி எண்ணங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளை ஒலி வடிவமாக மொழி பெயர்ப்பதற்கான முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். எதிர்வரும் சில வாரங்களில் இம்முயற்சி வெற்றிபெறக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த எண்ண சமிக்ஞைகளைப் பயன்படுத்தி பேச்சுக்கான மென்பொருளை விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.(அ-5)

# வட ,கிழக்கில் கல்வித்துறை சார்ந்தோருக்கு அனர்த்த முன் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பாட சாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு அனர்த்த முன்பாதுகாப்பு முகாமைத்துவம் மற்றும் உளவளத் துறை தொடர்பான விசேட பயிற்சிகளை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ஜேர்மன் இதற்கான நிதி உதவியினை வழங்க முன்வந்துள்ளது .இத் திட்டத்தின் கீழ் அனர்த்த முன்பாதுகாப்பு தொடர்பாக மேற்குறித்த கல்வித்துறை சார்பானவர்களுக்கு விளக்கமளிக்கப்படுமென்று இத் திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் எஸ். திவகலாலா தெரிவித்தார். இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மாணவர்கள் இரண் டாம்மொழி தொடர்பான அறிவை பரீட்சித்து அவர்களுக்கு அது தொடர்பில் பயிற்சியளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# நான்காவது போட்டியிலும் வென்று தொடரை வென்றது இந்திய அணி

## 97இல் ஆட்டமிழந்து மீண்டும் சதம் பெறும் வாய்ப்பை இழந்தார் சச்சின்

(குவாலியர்)


சொந்த மண்ணில் சாதித்து காட்டியது தோனி தலைமையிலான இந்திய அணி. குவாலியர் போட்டியில் சச்சின் அதிரடி கை கொடுக்க பாகிஸ்தானை 6 விக்கெற் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் தொடரை இந்தியா 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. 97 ஓட்டங்கள் விளாசிய சச்சின் மீண்டுமொரு முறை சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டது தான் ஏமாற்றம் அளிக்கும் விஷயமாக அமைந்தது.

இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில் இந்திய அணி 2-1 என்ற முன்னிலையில் இருந்தது. தீர்க்கமான நான்காவது போட்டி நேற்று முன்தினம் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள குவாலியரில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித்தலைவர் சோயப் மலிக் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இந்திய அணியில் 5ஆவது பந்து வீச்சாளர் முரளிகார்த்திக் நீக்கப்பட, சேவாக் வாய்ப்புப் பெற்றார். பாகிஸ்தான் அணியில் சுழற்பந்து வீச்சாளர் அப்துர் ரஹ்மானுக்கு பதிலாக இப்திகார் களமிறங்கினார்.

கான்பூர் போட்டியில் மோசமான ஆரம்பம் தந்த அப்ரிதி பின்வரிசைக்கு தள்ளப்பட்டார். இவருக்கு பதிலாக சல்மான்பட் உடன் ஆட்டத்தை துவக்கும் பொறுப்பை சோயப் மலிக்கே ஏற்றுக் கொண்டார். முதல் ஓவரை வீசிய ஆர்.பி. சிங் மிரட்டினார். இவர் போர்மில் இருந்த சல்மான் பட்டை (0) இரண்டாவது பந்திலே வெளியேற்றி அசத்தினார்.

ஹீரோ ரோவில் ஆட்டமிழக்க மொகாலி போட்டியில் சதம் கடந்த யுனிஸ், மலிக்குடன் ஜோடி சேர்ந்தார். இவர்கள் நிதானமாக விளையாட பாகிஸ்தானின் ஓட்ட வேகம் மந்தமானது. மெதுவாக அதிரடிக்கு மாறிய இந்த ஜோடி இரண்டாவது விக்கெற்றுக்கு 78 ஓட்டங்கள் எடுத்தது. ஓரளவு ஓட்டங்கள் சேர்த்த சோயப் மலிக் (31) ஜாகிர் கான் பந்தில் கிளீன் போல்டானார். இதையடுத்து யூசுப் களமிறங்கினார். சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த யூனிஸ் ஒருநாள் அரங்கில் 29ஆவது அரை சதம் கடந்தார். 'யூ' கூட்டணி (யூசுப், யூனிஸ்) விரைவாக ஓட்டங்கள் சேர்க்கத் தோனி பந்து வீச்சாளர்களை மாற்றி கொண்டே இருந்தார். ஆனால் இது எதுவும் பலன் தரவில்லை. இந்நிலையில் 30 ஆவது ஓவரின் கடைசி பந்தில் யூனிசை வெளியேற்றி யுவராஜ் திருப்பு முனை ஏற்படுத்தி



தந்தார். யூனிஸ் ஒரு ஆறு, 5 நான்குகள் உட்பட 89 பந்தில் 68 ஓட்டங்கள் எடுத்தார்.

அப்ரிதி (1) இம்முறையும் சோபிக்கவில்லை. மறுமுனையில் அபாரமாக விளையாடிய யூசுப் ஒரு நாள் போட்டிகளில் தனது 59ஆவது அரைசதம் பதிவு செய்தார். இவருக்கு நல்ல ஒத்துழைப்பு தந்த மிஸ்பா அதிரடியாக 40 ஓட்டங்கள் சேர்த்து பதான் பந்தில் பெவிலியன் திரும்பினார். தன்வீர் 6 ஓட்டங்கள் எடுத்தார். 2 ஆறு, 7 நான்கு விளாசிய யூசுப் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர் 104 பந்தில் 99 ஓட்டங்கள் எடுத்து சத வாய்ப்பை ஒரு ஓட்டங்களால் நழுவவிட்டார். மறுமுனையில் அக்மல் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் 50 ஓவர் முடிவில் 6 விக்கெற் இழப்புக்கு 255 ஓட்டங்கள் எடுத்தது.

வெற்றிக்கு 256 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணிக்கு கங்குலி (5) மோசமான ஆரம்பத்தை ஏற்படுத்தி கொடுத்தார். இவர் அக்தர் பந்தில் இரண்டாவது 'சிலிப்பில்' இருந்த யூனிசிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

**சச்சின் அதிரடி**

சிறப்பாக விளையாடிய சச்சின், தன்வீர் வீசிய 6ஆவது ஓவரில் 2 நான்கு உட்பட 13 ஓட்டங்கள் விளாசி அதிரடியை ஆரம்பித்தார். மறு முனையில் பொறுப்பில்லாமல் துடுப்பாட்டம் செய்த காம்பிர் வெறும் 3 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து இந்தியாவுக்கு சிக்கலை ஏற்படுத்தினார். அடுத்து சேவாக் வந்தார். குல் பந்தில் வரிசையாக இரண்டு நான்கு அடித்து சச்சின் ஒரு நாள் அரங்கில் 87ஆவது அரை சதம் கடந்தார். பாகிஸ்தான் பந்துவீச்சை தொடர்ந்து அடித்து நொறுக்கிய இவர் அப்ரிதி ஓவரில் ஹட்ரிக் நான்கு அடித்து மிரட்டினார். அப்ரிதியின் அடுத்த ஓவரில் இமாலய சிக்சர் அடித்த சேவாக்கும் விளாசலுக்கு மாற, பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் நிலமை பரிதாபமானது.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெற்றுக்கு 107 ஓட்டங்கள் குவித்த நிலையில் சேவாக் ஒரு ஓட்டத்துக்கு ஆசைப்பட்டு ரன் அவுட்டானார். இவர் ஒரு ஆறு, 43 ஓட்டங்கள் எடுத்தார். நேற்று முன்தினம் தனது 19ஆவது ஆண்டு கிரிக்கெற் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த சச்சின் மீண்டுமொரு முறை மூன்று ஓட்டங்களில் சத வாய்ப்பை நழுவவிட்டார். இவர் 97 ஓட்டங்களுக்கு (16 நான்கு) குல் பந்தில் போல்டானார்.

இதையடுத்து ஜோடி சேர்ந்த யுவராஜ், தோனி ஜோடி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அசத்தலாக விளையாடிய யுவராஜ். ஒரு நாள் போட்டிகளில் 33ஆவது அரைசதம் கடந்தார். பட் ஓவரில் ஒரு மெகா சிக்சர் அடித்த தோனி இந்தியாவுக்கு வெற்றி தேடித்தந்தார். யுவராஜ் 53, தோனி 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா 46.3 ஓவரில் 4 விக்கெற் இழப்புக்கு 260 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெற் வித்தியாசத்தில் வென்றது. இதன்மூலம் 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடரை 3-1 என கைப்பற்றியது. கடைசி மற்றும் ஐந்தாவது ஒருநாள் போட்டி நாளை ஜெய்ப்பூரில் நடக்கிறது.

**துல்லிய பவுலிங்:** இந்திய பந்துவீச்சாளர்கள் துல்லியமாக பந்துவீசினர். வழக்கமாக உதிரிகளை வாரி வழங்கும் இவர்கள் முதல் 19 ஓவரில் உதிரியாக ஒரு ஓட்டங்கள் கூட விட்டுக் கொடுக்கவில்லை. பாகிஸ்தானுக்கு உதிரியாக முதல் ஓட்டம் ஜாகிர் கான் வீசிய 20 ஆவது ஓவரின் இரண்டாவது பந்தில் லெக் பை மூலமாக கிடைத்தது.

**ஜாகிர் 200** பாகிஸ்தான் அணித்தலைவர் சோயப் மலிக்கை ஆட்டமிழக்கச்செய்த ஜாகிர் கான் ஒருநாள் போட்டிகளில் 200 விக்கெற் என்ற மைல்கல்லை எட்டினார். இதன் மூலம் கும்ளே (334), ஸ்ரீநாத் (315), அகார்கர் (288), கபில் தேவ் (253) ஆகியோருக்கு பிறகு இம் மைல் கல்லை கடக்கும் ஐந்தாவது இந்திய வீரரானார்.

**24 ஆண்டுகளுக்கு பின்...** பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி சொந்த மண்ணில் 24 ஆண்டுகளுக்கு பிறகு கைப்பற்றியுள்ளது. கடைசியாக கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி 1983ஆம் ஆண்டில் தொடரை வென்றிருந்தது.

**கங்குலி 100** அப்ரிதியை வெளியேற்றிய கங்குலி தனது 100ஆவது விக்கெற்றை கைப்பற்றினார். இதையடுத்து ஒருநாள் அரங்கில் 10ஆயிரம் மற்றும் 100 விக்கெற் வீழ்த்திய மூன்றாவது வீரர் என்ற பெருமை பெற்றார். முதலிரண்டு இடங்களில் இந்தியாவின் சச்சின் (15 ஆயிரத்து 835 ஓட்டங்கள் மற்றும் 154 விக்கெற்) மற்றும் இலங்கையின் ஜெயசூர்யா (12ஆயிரத்து 207 ஓட்டங்கள் மற்றும் 307 விக்கெற்) உள்ளனர்.

**42 எப்போது?** சூப்பர் ஆட்டத்தை வெளிப்படுத்திய சச்சின் நேற்று முன்தினம் சதம் அடிக்கும் வாய்ப்பை மூன்று ஓட்டங்களில் நழுவவிட்டார். ஒரு நாள் போட்டிகளில் அதிக சதம் (41) அடித்துள்ள சாதனைக்கு சொந்தக்காரரான இவர் 42 ஆவது சதத்தை எட்ட முடியாமல் தவித்து வருகிறார். 16ஆவது முறையாக 90 களில் ஆட்டமிழந்தார்.

கடந்த 28 போட்டிகளில் 6முறை 90களை கடந்த போதும், இவரால் ஒருமுறை கூட அதை சதமாக மாற்ற முடியவில்லை. கடைசியாக இவர் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக (2007, ஜன.31) சதம் அடித்தார். (அ-5)

### மூன்றாவது இடம்

பாகிஸ்தானுடனான இப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இந்தியா (318) அதிக ஒரு நாள் போட்டிகளில் வென்ற அணிகள் வரிசையில் மேற்கிந்திய தீவுகள் அணியை (317) முந்தி மூன்றாவது இடம் பிடித்தது. இவ்வரிசையில் முதல் 4 அணிகள்.

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | மற்றவை |
|---|---|---|---|---|
| ஆஸி. | 666 | 410 | 229 | 27 |
| பாக். | 668 | 355 | 292 | 21 |
| இந்தியா | 671 | 318 | 322 | 31 |
| மேற். தீவுகள். | 575 | 317 | 235 | 23 |

### லக்கி மான் யூனிஸ்

லக்கிமான் யூனிஸ்: இந்திய வீரர்கள் நேற்று முன்தினம் மோசமாக களத்தடுப்பு செய்தனர். மற்ற வீரர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய அணித்தலைவர் தோனி, பாகிஸ்தானின் யூனிஸ்கானை ஆட்டமிழக்கச் செய்யும் வாய்ப்பை 3 முறை தவறவிட்டார்.

யூனிஸ் 7 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பதான் பந்தில் கொடுத்த எளிய பிடியை தோனி கோட்டைவிட்டார். 32 ஓட்டங்கள் இருந்த போது பதான் பந்தில் யூனிஸ் கொடுத்த இரண்டாவது பிடியையும் நழுவவிட்டார்.

48 ஓட்டங்கள் எடுத்திருந்த போது யூனிசை 'ஸ்டெம்பிங்' செய்யும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பந்தை பிடிக்க தவறிய தோனி ஏமாற்றம் அளித்தார். இதை நன்றாக பயன்படுத்திக் கொண்ட யூனிஸ் 68 ஓட்டங்கள் எடுத்தார்.

விளையாட்டுச் செய்திகள்

## முரளி, வோர்ன் சமரசம்

இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முரளி தரன் மற்றும் அவுஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து



வீச்சாளர் ஷேன்வோர்ன் இடையே சமரசம் ஏற்பட்டது. இந்த இரு வீரர்களும் வோர்ன்-முரளிதரன் கிண்ண அறிமுக விழாவில் கைகுலுக்கிக் கொண்டு புன்னகையோடு காட்சியளித்தனர். இதன் போது தங்களிடையே ஏற்பட்ட மோதல் தவறான புரிதலால் ஏற்பட்டது. என்று கூறி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

முன்னதாக ஷேன்வோர்ன் அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் நியூஸ்லிமிடட் என்ற பத்திரிகைக்கு எழுதி வரும் கட்டுரையில் முரளிதரனின் பந்து வீச்சு பாணி குறித்து டெஸ்ட் போட்டி ஒன்றின்போதே சோதனை நடத்தி தெளிவுபெறவேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து சிட்னி மோர்னின் ஹெரல்ட் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முரளி ஷேன்வோர்னின் கருத்துக்கு பதிலடி கொடுத்தார். ஷேன்வோர்னுக்கு தனது உலக சாதனை பறிபோகும் என்று பயம் ஏற்பட்டுள்ளது. எனவே அவரால் வாயை மூடிக் கொண்டிருக்க முடியாது. வோர்ன் துர்ப்பாக்கியமானவராக இருக்கிறார் என்று முரளி இதன் போது தெரிவித்தார்.

இந்நிலையில் ஹோபார்ட்டில் நடந்த வோர்ன்- முரளிதரன் கிண்ண அறிமுகவிழாவில் இருவரும் கைகுலுக்கி புன்னகையுடன் காட்சியளித்தனர். முன்னர் இந்த நிகழ்ச்சியின் போது வோர்னுடன் முகம் கொடுத்து பேசமாட்டேன் என்று முரளி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் போது, வோர்ன் எனது பந்து வீச்சுப் பாணி குறித்து தெரிவித்ததும் நான் அவரை துர்ப்பாக்கியமானவர் என குறிப்பிட்டதும் தவறுதலான புரிதல் மூலம் ஏற்பட்டது என்று முரளி தெரிவித்தார். முரளியும் தானும் எப்பொழுதும் சிறந்த நண்பர்கள் என்று குறிப்பிட்ட ஷேன்வோர்ன் தனது பத்திரிகையில் வெளியிட்ட கருத்து தவறுதலாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-5)

## இந்திய வீரர்களுக்கு கில்கிறீஸ்ட் பாராட்டு

(மெல்போர்ன்)

இந்திய அணியின் இளம் வீரர்களை கில்கிறீஸ்ட் வெகுவாக பாராட்டியுள்ளார். அவுஸ்திரேலியாவின் சிறந்த ஒருநாள் வீரராக சமீபத்தில் கில்கிறீஸ்ட் தேர்வு செய்யப்பட்டார். இந்த மகிழ்ச்சியில் இவர் அளித்த பேட்டி.

இந்தியாவுக்கு எதிராக சமீபத்தில் நடந்த ஒருநாள் தொடரில் இளம் வீரர்கள் அடித்த சில அடிகள் என்னை பிரமிப்பில் ஆழ்த்தியது. எனது பாணி ஆட்டம் ஒருநாள் போட்டிக்கு ஏற்றதாகும்.

ஒரு காலத்தில் மிகவும் அதிரடியாக துடுப்பாட்டம் செய்யக்கூடியவன் நான் மட்டுமே. ஆனால் தற்போது இந்த நிலைமை மாறி விட்டது.

இளம் வீரர்களின் ஆட்டத்துக்கு என்னால் ஈடுகொடுக்க முடியவில்லை. என்னை ஆரம்ப வீரராக களமிறக்குவதாக ஸ்டீவ்வோ எடுத்த முடிபு வாழ்வில் திருப்பு முனையாக அமைந்தது. மிடில்-ஆர்டரில் நான் 20-25 ஓட்டங்கள் மட்டுமே குவித்துக்கொண்டிருந்தேன்.



சில முறை அணியின் வெற்றிக்காக நான் பங்களிக்கவில்லை என்று எண்ணியதுண்டு. அணித் தலைவர்கள்அனைவரும் எனக்கு ஊக்கம் அளித்தனர். இவ்வாறு கில்கிறீஸ்ட் தெரிவித்தார்.

எஜமானருக்கு ஜலதோஷம் தொடங்கினால்–
வேலைக்காரர்கள் தும்முவதற்கு ஆரம்பிப்பார்கள்.
– போலாந்து

வலம்புரி

# வரவு-செலவுத்திட்டத்தில் விலைபேசப்படும் எம்.பிக்கள்

2008 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும், அதனைத் தோற்கடிப்பதற்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விலை பேசப்படுகின்றது.

பொதுமக்களை கும்பிட்டு கூத்தாடி வாக்குப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகியவர்கள், இப்போது சந்தையில் விற்கப்படும் பொருள்போல விலை பேசப்படுவது வேடிக்கையான–வேதனையான விடயமாகும்.

அரச தரப்பைப் பொறுத்தவரை எதிர்க்கட்சியிலிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை எப்படியாவது தம்பக்கம் இழுத்து அவர்கள் மூலமாக, வரவு–செலவுத்திட்டத்தை நிறைவேற்றி விடவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. இதற்காக எத்தனை கோடிகளை செலவழிக்கவும் அரச தரப்பு தயார்.

அதேநேரம் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை எப்பாடு பட்டாவது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வரவு–செலவுத்திட்டத்தை தோற்கடித்து மகிந்த சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதில் இறுக்கமாக இருக்கின்றன.

அரசு, எதிர்க்கட்சி ஆகிய இருதரப்பும் தத்தம் பக்கம் வெற்றியடைய வேண்டுமென்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைபேசி வாங்குவதற்கு தயாராகிவிட்டன.

ஜனநாயக நாடு, ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட அரசு என உலக அரங்கில் உரக்கக் கத்துவோரின் அரசியல் பண்பாடு எப்படி இருக்கிறதென்பதை ஒரு கணம் சிந்தித்தால் ‘ஜனநாயகம்’ என்பதே வேண்டாமென்றாகிவிடும்.

மக்களை ஏமாற்றி–பொய் வாக்குறுதி அளித்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகிவிட்டு மக்களின் நலன்பற்றி இம்மியும் சிந்திக்காமல் கோடிக் கணக்கில் பணம் சம்பாதிக்கும் குறுகிய நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலைபோவது இலங்கை அரசியலில் மிகப்பெரும் இழிவுத்தனமாகும்.

இத்தகைய அரசியல்வாதிகளினால் ஜனநாயகப்பண்பை கட்டியெழுப்ப முடியுமென நினைப்பதே முதற்தர மடமைத்தனமாகும். இதனையே உலக நாடுகள் நினைக்கின்றன.

ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்பது பேசுவதற்கும், கேட்பதற்கும் இதமாக இருக்கலாம்.

ஆனால், அது இலங்கையில்–விலைபோகும் எம்.பிக்களைக் கொண்ட ஜனநாயக அரசில் சாத்தியமாகாதென்பது நிறுத்திட்டமான உண்மை.

ஆக, இதேநிலை தொடருமாயின் இலங்கையில் ஆட்சிமாற்றங்களும், ஆட்சிக் கவிழ்ப்புக்களுமே மலிவாகக் காணப்பட ஏனையவையெல்லாம் விலை உயர்ந்தவையாகவே இருக்கும்.

# உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்திரிப்பதன் மூலம் ஒருபோதும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது

## மாவை சேனாதிராஜா எம்.பி.சபையில் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக சித்திரிக்கின்ற அரசாங்கம் புலிகளை கொன்றொழிப்பதன் மூலமான பிரச்சினைக்கு தீர்வுகாண முற்பட்டால் அது தவறானது. எனினும் உக்ரேன், பாகிஸ்தான் விமானிகளிடம் பயிற்சி பெற்று பிரபாகரனை கொல்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வரவு– செலவுத்திட்டம் மிதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது , பிரபாகரனை பலியெடுப்பதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வுகாண முடியாது. எனினும் உக்ரேன், பாகிஸ்தான் விமானிகளின் பயிற்சியின் மூலமாக பிரபாகரனை கொலை செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக தகவல்கள் ஊடகங்களில் வெளியாகி இருக்கின்றன.

சகல பயங்கரவாத குழுக்களையும், ஆயுதம் ஏந்தி போராடுபவர்களையும் ஒரே கூடைக்குள் போட்டுப் பார்ப்பது தவறானது என்று அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரான கிளாரி கிளின்டன் தெரிவித்திருந்தார். அதேபோல இந்த அரசாங்கம் நினைப்பதை போல தமிழர்களின் போராட்டத்தை தடுத்து நிறுத்த முடியாது.

முரண்பாடுகள், மோதல்கள், உரிமைபோராட்டங்களை பயங்கரவாதமாக சித்திரிப்பதன் மூலமாக பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காணவே முடியாது. அதேபோல சர்வதேசத்தில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அயல் நாடுகளின் யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் பயங்கரவாத கூண்டுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். எனினும் அவருடன் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதற்கு பின்னரே பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தார். எனினும் புலிகள் இன்று பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்படுகின்றனர்.

வரவு– செலவுத் திட்டத்தில் யுத்தத்திற்கு வருடா வருடம் கூடுதலான நிதிஒதுக்கப்பட்டுள்ளது. அதே நிலைதான் 2008 ஆம் ஆண்டிற்கும் ஏற்பட்டுள்ளது என்பதுடன், அத்தியாவசிய பொருட்களின் வளர்ச்சி வேகம் 20 வீதத்திற்கு மேல் அதிகரித்து சென்றிருக்கின்றது.

மணலாற்றில் காணிகளை இழந்தவர்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள அரசாங்கம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் விவசாய காணிகளை இழந்த மக்களுக்கு எவ்விதமான நட்ட ஈடுகளையும்வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

நாட்டில் மந்தபோஷனம் அதிகரித்துள்ளது. வடக்கில் மட்டுமே 9 இலட்சம் சிறுவர்கள் மந்த போஷனத்தில் இருக்கின்னர். வடக்கு கிழக்கு மக்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்படுவதே இல்லை. இந்நிலையில்நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்காக கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

. தீர்வுத் திட்டமின்றி தமிழ் மக்களை கொன்றொழிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்றார். (அ–5)

# அரசின் வரவு–செலவுத் திட்டம் யானை விழுங்கிய விளாம்பழம்

## ஜே.வி.பி. எம்.பி.சந்திரசேன விஜயசிங்க வர்ணனை

பலவீனமானதொரு வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து விட்டு யுத்தம் காரணமாக முழுமையான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியாமல் உள்ளதாக அரச தரப்பு கூறுவது வேடிக்கையானது என்று ஜே. வி. பி யின் காலி மாவட்ட எம்.பி சந்திரசேன விஜயசிங்க சபையில் தெரிவித்தார். வரவு –செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

மஹிந்த சிந்தனையின் வெற்றிக்காக பாடுபட்டவர்கள் ஜே.வி.பி தோழர்களாவர் . ஆனால் இன்று மஹிந்த சிந்தனை வேறு திசையில் செல்கின்றது. சர்வதேச நாடுகளின் கடன்களிலும்ஆலோசனைகளிலும் அபிவிருத்தி திட்டங்கள் தங்கியுள்ளன. இது ஒரு மலட்டு வரவு– செலவுத்திட்டம்.

யானை விழுங்கிய விளாம்பழம் போன்றது. 19 சதவீதம் பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. 381 பில்லியன் ரூபாவை கடன் தாண்டி விட்டது. உற்பத்தி பொருளாதாரத்துக்கு ஊக்குவிப்பு வழங்கும் உபாய மார்க்கம் எதுவும் இல்லை. தற்கால சவால்களை எதிர்கொள்ள கூடிய தத்துவார்த்தமான சிந்தனைகள் எதுவும் இதில் இல்லை.

இவ்வாறான பலவீனமான வரவு–செலவுத்திட்டம் ஒன்றை சமர்ப்பித்து விட்டு யுத்தம் காரணமாக எதுவும் செய்ய முடியாதிருப்பதாக கூறுகின்றனர்.

தற்போதுள்ள நெருக்கடியை சமாளிக்க வேண்டுமானால் அந்நிய செலாவணியை தேடுகின்ற ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். அதற்கான இடமுண்டு. தேயிலை கைத்தொழில்மூலமான 91 பில்லியன் ரூபா அந்நிய செலாவணி பெறப்பட்டது. இதனை 125 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கலாம். ஆனால் தேயிலை தோட்ட உரிமை யாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

உரமானியத்தை வழங்கினால் மட்டும் போதாது. ரூபாவின் மதிப்பிறக்கத்தை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன? மக்களுடைய பணத்தில் பிழைத்துக் கொண்டிருக்கும் ஆலோசகர்கள் என்ன செய்கின்றனர்? ஜனாதிபதியை ஒரு கூத்தாடியாக மாற்றியமைத்த இந்த வரவு– செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தவர்கள் யார்?

இந்த வரவு –. செலவுத்திட்டத்தின் மூலம் ஜனாதிபதி கொச்சைப்படுத்தப்பட்டு விட்டார். ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய கடன் தவணைகள் செலவில்சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இது மென்மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும். இதுவரை காலமும் இருந்த மதிப்பு வரவு–செலவுத்திட்டத்தின் மூலம் கொச்சைப் படுத்தப்பட்டுவிட்டது. இது ஒரு வெற்று ஆவணம். (அ–5)

# 2008 இல் வவுனியாவில் பல்கலைக் கழகமும் முருங்கனில் பயிற்சி கல்லூரியும் அமைக்கப்படும்

வவுனியாவில் தனியான பல்கலைக்கழகமும் முருங்கனில், வடபகுதி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கல்லூரியும் அமைக்கப்படும் என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

வவுனியா விபுலானந்த கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் வைபவம் அண்மையில் அதிபர் மு.ஜெயதரன் தலைமையில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் , வவுனியாவில் தனியான பல்கலைக்கழகம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வவுனியா பம்பைமடு எனும் கிராமத்தில் இதற்கான 150 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வடபகுதி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்று முருங்கனில் அமைக்க இருபத்தைந்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்றார். (அ–5)

# கற்பித்தல் செயலமர்வு

(அல்வாய்)

யுனிசெப் அனுசரணையுடனான ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கான மாணவர் மையக் கற்பித்தலும், பலதரக் கற்பித் தலுக்குமான செயலமர்வு, 2008 இல் தரம் III இற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளிலும் 2008 இல் தரம் IV இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 21, 22 ஆம் திதிகளிலும் காலை 8மணிமுதல் பி.ப. 2.30 மணிவரையும் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார். (அ–19)

# இயற்கை வாயு மின்சார உற்பத்திக்கு ஈரான் அரசாங்கம் உதவி

இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ள முதலாவது இயற்கை வாயு மின்சார உற்பத்தித் திட்டத்துக்கு ஈரான் அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது.

ஹம்பாந்தோட்டையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த மின் உற்பத்தி நிலையத்துக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இரு நாடுகளுக்குமிடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த உடன்படிக்கை தொடர்பான நகல் விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று மின் சக்தி, எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கைக்கான ஈரானியத் தூதுவர்மற்றும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் டபிள்யு. டீ ஜே. செனவிரட்ண ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து இந்த புரிந்துணர்வு ஒப்ந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

மிரிஸ்வத்தையில் இந்த மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க முதலில் திட்டமிடப்பட்டது. எனினும் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஹம்பாந்தோட்டை பிரதேசமே இதற்கு மிகப் பொருத்தமான இடம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் 90 மெகவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ‘உமா ஓயா’ நீர் மின் திட்டத்துக்கும் ஈரான் அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ–5)

# பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைப்பு புதிய பிரதமர் நியமனம்; பெனாஸிர் விடுதலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாடாளும்மன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவு கலைக்கப்பட்டது. இடைக்கால பிரதமராக செனட் சபைத் தலைவர் முகமதிமியான் சோம்ப்ரோவை ஜனாதிபதி முஷாரப் நியமித்துள்ளார். அவர் நேற்று பதவி ஏற்றார்.

ஜனவரி மாதம் தேர்தல் நடப்பது வரை இவர் இடைக்காலப் பிரதமராக நீடிப்பார். பாகிஸ்தானில் கடந்த மூன்றாம் திகதி நெருக்கடியை நிலையை ஜனாதிபதி முஷாரப் அமுல்படுத்தினார். இத்னையடுத்து முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் இரவோடிரவாக கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

நெருக்கடி நிலையை இரத்துச் செய்யக் கோரியும் இராணுவத் தளபதி பதவியை இராஜினாமா செய்யக் கோரியும் முன்னாள் பிரதமர் பெனாஸிர் கடந்த 13 ஆம் திகதி லாகூரிலிருந்து இஸ்லாமாபாத்திற்கு தடையை மீறி பேரணியாகப் புறப்பட்டார்.

ஆனால் பேரணி புறப்படுவதற்கு முன்பே பொலிஸார் அவரைச் சுற்றி வளைத்து லாகூரில் வீட்டுக் காவலில் வைத்தனர். பெனாஸிர் வீட்டுக் காவலில் வைக்கப்படுவது இது இரண்டாவது தடவை. அவரை ஏழு நாள் காவலில் வைக்க வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது. பெனாஸிரை விடுதலை செய்யும்படியும் நெருக்கடி நிலையை இரத்துச் செய்து ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தும்படியும் அமெரிக்க அதிபர் புஷ் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை பெனாஸிர் திடீரென்று விடுதலை செய்யப்பட்டார். அவரது வீட்டுக் காவல் இரத்துச் செய்யப்பட்டு விட்டதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனாலும் அவரது வீட்டைச் சுற்றிப் பொலிஸார் காவலுக்கு நிற்கின்றனர்.

பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள் யாரும் வீட்டிற்குள் அனுமதிக்கப்படவில்லை. பெனாஸிருக்குப் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட மனித உரிமை இயக்கத் தலைவர் அஸ்மா ஜாங்கிரும் விடுதலையானார். இந்த நிலையில் முஷாரப்புக்கு எதிராக பெனாஸிரின் ஆதரவாளர்கள் போராட்டம் நீடிக்கின்றது.

நேற்று முன்தினம் கராட்சியில் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தொண்டர்கள் நடத்திய போராட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் குண்டு பாய்ந்து இரண்டு சிறுவர்கள் பலியாகினர். இந்த நிலையில் டிசம்பர் முதலாம் திகதி இராணுவத்தளபதி பதவியிலிருந்து விலகுவதாக முஷாரப் அறிவித்துள்ளார்.(சி)

## இராணுவ உதவிக்கெதிராக சேலத்தில் கையெழுத்து இயக்கம்

இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு ஆயுத உதவிகளை வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தி தமிழகத்தின் சேலத்தில் பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத்தினர் நேற்று பொதுமக்களிடம் கையெழுத்து சேகரித்தனர்.

சேலம் போஸ் மைதானத்தில் முற்பகல் 10.00 மணியளவில் தொடங்கப்பட்ட இக்கையெழுத்து இயக்கத்திற்கு பெரியார் திராவிடர் கழகத்தை சேர்ந்த சட்டக் கல்லூரி மாணவர் முருகவேல் தலைமை வகித்தார். தமிழ் நாடு மாணவர் கழகத்தின் கனகசபா, அருண், சட்டக்கல்லூரி மாணவர்களான சீனிவாசராவ், சிவபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியார் திராவிடர் கழக நிர்வாகி இரா.டேவிட் இக்கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். பெருந்திரளான மாணவர்கள் பொது மக்கள் கையெழுத்திட்டுள்ளதாக தமிழ்நாடு மாணவர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

## விடுதலைப்புலிகளை தடை...

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதையொட்டி கடந்த2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் இரு தரப்பினருக்கும் இடையில் மீண்டும் போர் தீவிரமடைந்தது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மீண்டும் தடைவிதிக்க அரசு முடிபு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

சில சிங்களக் கட்சிகள் விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்க வலியுறுத்தி வருகின்றன. அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் தொடர்பாக வாக்கெடுப்பு நடைபெறுகின்றது.

இதில் சிங்களக் கட்சிகளின் ஆதரவை பெறுவதற்காக அரசு இந்த முடிபுக்கு வந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வங்கதேச ...

சூறாவளி தொலைத் தொடர்பு வழிகளையும் துண்டித்துள்ளது. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முயற்சியாக உதவி நிறுவனங்களும் அரசாங்கமும் நிவாரண நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. (ச-5)

## ஐ.தே.க. எம்.பிக்களுக்கு ...

ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரிடம் முறையிட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டார தலைமையில் கூடியபோது பிரதான நடவடிக்கைகள் முடிபடைந்ததன் பின்னர் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை முன்வைத்தே மேற்கண்டவாறு அதில் முறையிட்டார். அவர் தொடர்ந்து தனது சிறப்புரையில் கூறியதாவது,

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் சகல உறுப்பினர்களும் உரையாற்றுவதற்கான உரிமையிருக்கின்றது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹேரல் குணசேகர, வஜிர அபேவர்த்தன ஆகியோரை குற்றப் புனாய்வுப் பிரிவினர் விசாரணைக்காக அழைத்திருக்கின்றனர். இது உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயலாகும்.

ராஜசிங்கம் என்பவரினால் மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிதி தொடர்பாகவே இந்த மூன்று உறுப்பினர்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைத்திருக்கின்றனர். எனினும் அந்தக் கணக்கு வழக்கு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருடன் பேசப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வங்கியிலுள்ள குறித்த நிதி கறுப்புப் பணம் என்றும் தூய்மையாக்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதையடுத்தே எமது கட்சியின் உறுப்பினர்கள் மூவரை புலனாய்வுத் துறையினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே குற்றப் புல்னாய்வுப் பிரிவினரின் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ச-5)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக ...

இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான தொண்டு நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை விட பல மடங்கு அதிகமான மனிதாபிமான உதவிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வந்துள்ளது.

தமிழ் மக்களின் வாழ்விடங்களை அழித்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கான பொருளாதார மூலங்களை அழித்து சொந்த வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிப்பதன் மூலம் சொந்த மண்ணிலே அகதிகளாக அனைத்துக்கும் கையேந்தி வாழ அரசு நிர்ப்பந்தித்துள்ளது.

இதன்மூலம் தமிழ் மக்களின் கல்வி, பொருளாதாரம், கலை, கலாசாரம், பண்பாடு அனைத்தையும் அழித்துவிடவே சிங்கள அரசு முயன்று வருகின்றது. அகதிகளாக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் கையேந்தி வாழாமல் சொந்தக் காலில் சுய கௌரவமாக வாழ வழிசமைத்ததுடன் தமிழ் மக்கள் தமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையிழந்து விடாமல் காப்பதிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபாட்டுடன் உழைத்துள்ளது.

கடந்த 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரலைத் தாக்கத்தின் பின்னர் அந்த அழிவிலிருந்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மறுவாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பெரும் பங்கு வகித்தது என்பது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் அவர்களுக்கு நன்கு தெரியும்.

அரச பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் உள்ளாக்கி வரும் அரசுக்கு அனைத்துதவிகளையும் செய்து வரும் அமெரிக்கா மேற்படி இலங்கை அரசின் நடவடிக்கைகளால் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவியளித்து அரவணைத்து வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை முடக்குவதற்குத் தீர்மானித்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக மகிந்த முன்னெடுத்து வரும் இன அழிப்புப் போரை மேலும் தீவிரப்படுத்தி ஏற்கனவே அவலங்களைச் சந்தித்து வரும் தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் இடப்பெயர்வுகளையும் அழிவுகளையும் கொடுப்பதற்கே வழிவகுப்பதாக அமைகின்றது என்றுள்ளது. (எ-5)

## தற்போது ஏற்பட்டுள்ள ...

மக்கள் பிரிவின் பிரதான இணைப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிபதி சூரியாராட்சி தெரிவித்தார்.

தென்பகுதியிலும் யுத்தத்திற்கான தயார்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காலித்துறைமுகம் மீதும் அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிய ாகப் பதவி ஏற்றதன் பின்னரே இவ்விரு தாக்குதல் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. புலிகள் பலமடைந்து வருவதற்கான சமிக்ஞையாகவே இவற்றைப் பார்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு கேம்பிரிட்ஜ் டெரஸ்ஸில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்ற தேசிய சபையின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சிறிபதி சூரியாராட்சி எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் இங்கு மேலும் கூறியதாவது,

25 வருட கால யுத்த வரலாற்றில் தென் மாகாணத்தில் எந்தவொரு தாக்குதல்களும் நடைபெறவில்லை. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. யால சரணாலயப் பகுதியில் புலிகளின் அச்சுறுத்தல் உள்ளது. தென் பகுதியில் மிக இலகுவாகத் தாக்குதல் நடத்தப்படுகின்றது. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன் பின்னர் புலிகள் பலமடைந்துள்ளனர் என்பதுவே இவற்றுக்கான ஒரே காரணம்.

6 ஆயிரத்துக்கும் 7 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான புலிகள் சிறந்த யுத்தப்பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். இவர்களைக் கொண்டு படையினரின் தாக்குதல்களை முறியடிக்க புலிகள் இயக்கம் தயாராகியுள்ளது. இதனைக் கடந்த 7 ஆம் திகதி முகமாலையில் இடம்பெற்ற மோதலில் கண்டு கொண்டோம். இதன்போது 150 படையினர் காயப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர் என்றார் (ச-5)

## அதிகாரப் பரவலாக்கலின் ...

ரணிலுக்குக் கிடையாது. வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க வேண்டிய அவசியம் புலிகளுக்கேயுள்ளது. அதற்கான சூழ்ச்சிகளே பல வழிகளிலும் முன் னெடுக்கப்படுகின்றது.

இலங்கையைக் கட்டி எழுப்புவதுடன் எமது நிதி வெளிநாடுகளுக்குச் செல்லாமல் உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில் இம்முறை மக்களுக்கான வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக சில சக்திகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொண்டு வடக்குக் கிழக்கு மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். அதனையே அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவருகின்றது.

அனைத்தையும் நடைமுறைப்படுத்த எமக்கு நாடு அவசியம். தாய்நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. அதற்காகவே பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

பயங்கரவாதிகளைப் பூண்டோடு ஒழிக்கும் வரை பின்தொடர்ந்து தாக்கியழிக்கும் நடவடிக்கை தொடரும் என்று ஜனாதிபதி கூறியதாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்து முடக்கம்...

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை முடக்குவதாக அமெரிக்க நிதியமைச்சு வெளியிட்ட அறிவிப்புத் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய றொபேட் ஓ பிளேக் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளுக்காக நிதி திரட்டியமை மற்றும் இரண்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பான குற்றச்சாட்டின்பேரில் கடந்த 2006 ஓகஸ்டிலும் 2007 ஏப்ரலிலும் 9 நபர்களை எவ்.பி.ஐ. பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் மூன்றுபேர் விடுதலைப்புலிகளுக்கு உபகரணங்களை வழங்கியமை தொடர்பாகவும் மேலும் மூன்று பேர் ஊழல் மற்றும் கடத்தல்களுக்காகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

மீதமாகவுள்ள மூன்று பேர் அடங்கலாக கைது செய்யப்பட்ட ஒன்பது பேரும் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்விசாரணைகளிலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நிர்வாக மற்றும் நிதியியல் ரீதியான தொடர்புகளுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது விடுதலைப்புலிகளுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டமையும் அவ்வமைப்பின் வலையமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணி வந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் செயற்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது விடுதலைப்புலிகள் அமைப்பிற்காக வெடிமருந்துகள், உபகரணங்கள், தொலைத் தொடர்பு அமைப்புக்கள், ஏனைய கருவிகள் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இதனையடுத்துப் பயங்கரவாத அமைப்புக்களைத் தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் கொள்கைக்கு அமைய அமெரிக்கத் திறைசேரி திணைக்களமானது தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது நிறைவேற்று உத்தரவின் பிரிவு 13224 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அசையும் அசையாச் சொத்துக்களை அமெரிக்க நிதியமைச்சு முடக்கியுள்ளது. எனினும் இந்த நடவடிக்கையானது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையல்ல. தமிழ் மக்களின் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான மனிதயுரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது என்றார். (ச-5)

## வீதித் தடையில் ...

தற்கு அமெரிக்கத் தூதுவருக்கு படையினர் அனுமதி மறுத்து நடந்து செல்லுமாறு பணித்ததாக தெரிவிக்கப்பட்டது.

அரசின் முக்கிய பிரமுகர்களின் போக்குவரத்து அந்த நேரத்தில் இடம்பெறவிருப்பதாகத் தெரிவித்தே இராணுவத்தினர், அமெரிக்கத் தூதுவரின் வாகனத்தை மறித்து தடுத்து வைத்திருந்தனர்.

அந்தநேரம், தான் ஊடகவியலாளர் சந்திப்பிற்காக செல்வதாகவும் தன்னை மேலே செல்ல அனுமதிக்குமாறும் அமெரிக்கத் தூதுவர் வேண்டுகோள் விடுத்தார்.

எனினும் அதற்கு அனுமதி மறுத்த படையினர் நடந்து செல்லுமாறு கூறியுள்ளனர். இதனையடுத்து அவர் நடந்து சென்றே ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அமெரிக்கத் தூதுவருக்கே இந்த நிலை என்றால் சாதாரண பொதுமக்களின் நிலை என்னவாக இருக்கும் என்று உரிய தரப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என மக்கள் கேட்டுக் கொண்டனர். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.